GOKULAM


கோகுலம்



"கோகுலம் கோப்பை எங்களுக்கே!"

ரூ.6/-


ஜனவரி 2003



ஐந்தில் ஒன்று வித்தியாசமானது. அது எது?


விடை : 3-வது வடிவம் மட்டும் நான்கு பகுதி களைக் கொண்டது. மற்றவை மூன்று பகுதிகள்.


திருடனைப் பிடிக்க போலீஸ்காரருக்கு வழிகாட்டி உதவுங்கள்!






வரைந்து பழகுங்கள்!





இங்குள்ள காய்களில் ஒன்று மட்டும் ஒரு விஷயத்தில் மாறுபட்டிருக்கிறது. அது எது? ஏன்?


விடை : கத்தரிக்காய் செடியில் காய்த் தது. மற்றவை கொடியில் காய்த்தவை.



கோகுலம்

ஜனவரி 2003
மலர்: 20
இதழ் : 12

குத்துச் சண்டை இன்று மிகவும் பிரபலமான விளையாட்டு. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து இருமுறை இந்தியர் ஒருவர் தங்கப்பதக்கம் வென்றிருக்கிறார். இந்த இதழில் குத்துச் சண்டை பற்றிய தகவல்கள் சில பக்கங்களில் இடம் பெற்றுள்ளன.





புதிய பகுதி
அன்புள்ள ஜக்குவுக்கு....
- இது கேள்வி
- பதில் பகுதி. உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் காத்திருக்கிறான் ஜக்கு.
பக் - 9

மேடையில் ஏறிப் பேச பயப் படுகிறீர்களா? உங்கள் பயத்தைப் போக்க உபயோகமான தகவல்கள் நெட் பிட்ஸில் இடம் பெற்றுள்ளன. பக். - 5





தலை, கை, கால்கள் எதுவுமின்றி ஓர் உயிரினம் இந்த உலகில் வாழ்கிறது. அது என்ன தெரியுமா? பக். - 28

கிராமம், நகரங்களில் உலா சென்றிருப்பீர்கள். வன உலா சென்றிருக்கிறீர்களா? திகிலும் சுவாரசியமும் நிறைந்த வனத்தில் நீலன், பூங்கோதை, மணி, பூங்குன்றன், குமார் ஆகியோருடன் நீங்களும் பயணியுங்கள்! பக். - 31.




உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்

செய்தித் துளிகள்!





சூரிய கிரகணம்

ஆஸ்திரேலியாவில் அடிலெய்ட் நகரில் டிசம்பர் 4ந் தேதி முழு சூரிய கிரகணம் ஏற்பட்டது. சூரியனைச் சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாக மறைத்த அற்புதமான காட்சியைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

புதின் வருகை

ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின் மூன்று நாள் பயணமாக இந்தியா வந்தார். பயங்கரவாத எதிர்ப்பு, பொருளாதார மேம்பாடு, அறிவியல் தொடர்பு, தொழில் நுட்பம், தொலைத் தொடர்பு உள்ளிட்டவை குறித்து இந்தியா ரஷ்யாவுக்கு இடையில் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டன. பிரதமர் வாஜ்பாயை ரஷ்யா வருமாறு அதிபர் புதின் விடுத்த அழைப்பை பிரதமர் ஏற்றுக் கொண்டார்.

மொழிகள்

தெற்காசிய நாடுகளில் 1079 மொழிகள் உள்ளன. 550 மில்லியன் மக்கள் ஹிந்தி, பெங்காலி, மராத்தி குஜராத்தி மொழிகளைப் பேசுகின்றனர். 113 மில்லியன் மக்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிகளைப் பேசுவதாகத் தெற்காசிய மொழிகளின் மாநாட்டில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

செயற்கை மழை

மழைப் பொழிவை உண்டாக்கக் கூடிய புதிய இயந்திரத்தைத் தயாரிக்கும் பணியில் ஸ்டீபன் சால்டர் இறங்கியிருக்கிறார். இவர் ஸ்காட்லாந்தின் எடின்பரோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர். இவர் தயாரிக்கும் இயந்திரத்தை எந்த நாட்டில் மழைப் பொழிவு இல்லையோ அல்லது குறைவோ அந் நாட்டின் கடலுக்குள் நிறுத்தி நீரை ஆவியாக்கச் செய்ய வேண்டும். இந்த நீராவி விண்ணில் இருக்கும் மேகங்களுடன் சேர்ந்ததும் குளிர்ந்து மழையாகப் பெய்யும் என்கிறார் ஸ்டீபன் சால்டர்.

கருந்துளைகள்

பூமியிலிருந்து 40 கோடி ஒளி ஆண்டுத் தொலைவில் (ஒளியானது ஓராண்டில் பயணம் செய்யும் தூரம்) இருப்பது என்ஜிசி - 6240. இதில் பத்து லட்சம் சூரியன்களின் ஆற்றல் அடர்த்தியைக் கொண்ட இரு பெரும் கருந்துளைகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஒளியைக்கூட வெளியே விட்டுவிடாத அளவுக்கு அதிபயங்கர ஈர்ப்பு விசையும் வெப்பமும் கொண்டவை இந்தக் கருந்துளைகள். இவற்றின் ஈர்ப்பு விசையிலிருந்து தகிக்கும் சூரியன்கள் கூடத் தப்ப முடியாது. அவற்றையும் தம்முடன் ஈர்த்து இழுத்துக் கொள்ளக் கூடியவை இக்கருந்துளைகள்.



கெட்டிலாக மாறிய நாய்!

ராமசாமி வயதானவர். ஒரு மலையடிவாரம் வழியே நடந்து கொண்டிருந்தார். வழியில் மூன்று சிறுவர்கள் ஒரு நாயைத் துன்புறுத்திக் கொண்டிருந்தனர். ராமசாமிக்கு இந்தக் காட்சி மிகவும் வேதனை அளித்தது. உடனே சிறுவர்களிடம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து நாயை விலைக்கு வாங்கினார். நாய்க்குக் காயம் பட்ட இடத்தில் மருந்து வைத்து, கட்டுப் போட்டார். இரண்டு நாட்களில் நாய் குணமானதும் மலையடிவாரத்தில் கொண்டு வந்து விட்டார்.

"இனிமேல் இந்தப் பக்கம் வராதே. காட்டுக்குள் போய் சுதந்திரமாக வாழ்" என்று ராமசாமி கூறியதும் நாய் மகிழ்ச்சியுடன் வாலை ஆட்டியது.

நாட்கள் சென்றன. ராமசாமி ஏழ்மையில் வாடினார். இன்னும் சில நாட்களில் பண்டிகை வர இருந்தது. ராமசாமியின் கையில் பணமில்லை. செய்வதறியாது மலையடிவாரத்தில் நடந்து கொண்டிருந்தார்.

அப்போது ஒரு நாய் ஓடிவந்து அவர் காலைக் கவ்வியது.

"ஐயா, என்னை நினைவிருக்கிறதா? சென்ற ஆண்டு மூன்று சிறுவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றினீர்களே!" என்றது நாய்.

"ம்... நினைவிருக்கிறது. எப்படி இருக்கே?" என்று வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார் ராமசாமி.

"நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன். தங்களுக்கு என்ன கவலை? என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்" - நாய்.

"உன்னால் என்ன செய்ய முடியும்? இந்த ஊர் பண்ணையார் என் நிலத்தை ஏமாற்றி வாங்கி விட்டார். நான் பண்டிகையைக் கொண்டாடக் கூட முடியாமல் இருக்கிறேன்" என்று வருத்தத்துடன் கூறினார் ராமசாமி.

"ஐயா, நான் ஒரு தங்கக் கெட்டிலாக மாறி விடுகிறேன். என்னைக் கொண்டு போய் பண்ணையாரிடம் விற்று விடுங்கள். உங்களுக்கு நிறையப் பணம் கிடைக்கும்" என்ற நாய் உடனே தங்கக் கெட்டிலாக உருமாறியது.

ராமசாமி பண்ணையாரிடம் கொண்டு போய் கெட்டிலைக் கொடுத்தார்.

பண்ணையார் உடனே ராமசாமியின் நிலத்தைத் திருப்பிக் கொடுத்ததுமல்லாமல் சிறிது பணத்தையும் கொடுத்தார். ராமசாமி மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார்.

பண்ணையார் கந்தனை அழைத்து, "இந்தத் தங்கக் கெட்டிலை நன்றாகத் தேய்த்து, டீ போடு" என்று கூறினார்.


கந்தன் புளியைப் போட்டு நன்றாகத் தேய்க்க ஆரம்பித்தான்.

"ஐயோ... மெதுவாகத் தேய், வலிக்குது" என்று கெட்டிலில் இருந்து குரல் வந்தது.

கந்தசாமி பயந்து, பண்ணையாரிடம் தகவலைச் சொன்னான். பண்ணையார் வந்து பார்த்தார். கெட்டில் அமைதியாக இருந்தது.


பண்ணையார் கண் முன்னே கெட்டிலைச் சுத்தம் செய்து அடுப்பில் வைத்தான் கந்தன். "ஐயோ சுடுதே" என்ற சத்தம் கெட்டிலிலிருந்து வந்தது.

பண்ணையார் கண்முன்னாலேயே தங்கக் கெட்டில் நாயாக மாறி ஓட்டம் எடுத்தது. எல்லோரையும் ஏமாற்றிய பண்ணையார் ஏமாந்து போய் நின்றார்.



1719ல் ஜேம்ஸ் பிக் என்பவர் லண்டனில் குத்துச்சண்டையாளர்களின் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். அவருக்குப் பின் அச்சங்கத்திற்குத் தலைவராக வந்த ஜான் பிராட்டன் என்பவர் குத்துச்சண்டை விளையாட்டுக்கான விதிகளை உருவாக்கினார். காயங்களைத் தவிர்ப்பதற்காக ரப்பர் கையுறை அணிய வேண்டும் என்ற வழக்கத்தைக் கொண்டு வந்தவரும் இவரே!

தொகுப்பு : ஏ.கே. நாசர்



மேடை பயம்!


பள்ளிக்கூட நிகழ்ச்சியொன்றில் மேடை ஏறி, பேச வாய்ப்பு கிடைத்தது ஒரு சிறுமிக்கு. மேடை ஏறி, மைக் முன்னே நின்று, எதிரில் அமர்ந்திருந்த கூட்டத்தினரைப் பார்த்தவுடன், வயிற்றுக் குள்ளே ஒருவித படபடப்பு ஏற்பட்டு விட்டது. பேச வேண்டிய விஷயம் மறந்து போய் விட்டது. வியர்த்து விறுவிறுத்து விட்டாள் அந்தச் சிறுமி.

இந்த மேடை பயத்தைப் போக்குவது எப்படி என்று வைசாலி என்ற பெயர் கொண்ட அந்தச் சிறுமிக்குத் தரப்படும் ஆலோசனை இது.

"மேடை பயம் என்பது சிறுவர், சிறுமியருக்கு மட்டுமே வருவது இல்லை. எத்தனையோ பெரியவர்கள் கூட, மேடை ஏறியபின், பயந்து, பேசுவதற்குத் தடுமாறுவது சகஜம்தான். ஆனால், இந்த மேடை பயத்தைப் போக்க முடியும்.

எப்படி? பயம் என்பது மனதுக்குள் ஏற்படும் ஒன்று. அதன் பாதிப்பை உடம்பு உணர்கிறது. எனவே, மனதினை, படபடப்பு இல்லாமல், ரிலாக்ஸாக வைத்துக் கொள்ள வேண்டும். மேடை ஏறப் போகிற நிமிடம் வரை, அதைப் பற்றியே நினைத்து, பயந்து கொண்டிருக்கக் கூடாது.

இந்தியாவின் சூப்பர் கிரிக்கெட் வீரரான சச்சினுக்குக் கூட, மைதானத்தில் விளையாட நுழைவதற்கு முன் பய உணர்வு இருக்கு



ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஹாவாசிங் என்ற இந்தியக் குத்துச்சண்டை வீரர் 1966, 1970ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து இருமுறை தங்கப் பதக்கங் களைத் தட்டிக் கொண்டு வந்திருக்கிறார்.

மாம். எனவே, அவர் ஆடத் தயார் ஆனபின், மைதானத்தில் நுழையும் தருணம் வரை, ஏதாவது ஒரு இசையைக் கேட்டுக் கொண்டு இருப்பாராம். இதுபோல, இசை கேட்கும் முறையை அனை வருமே கடைபிடித்துப் பலன் காணலாம்.

உங்கள் மீது உங்களுக்குத் தன்னம்பிக்கை குறைந்தால்தான், பயம் ஏற்படும். எனவே தைரியமாக, தன்னம்பிக்கையோடு இருக்க நீங்கள் பயிற்சி செய்து கொள்ள வேண்டும்.

அதற்கு என்ன செய்வது?

என்ன பேசப் போகிறோமோ அதை மிக நன்றாகத் தயார் செய்து, மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

மறுபடியும், மறுபடியும், வீட்டில், பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவி னர்கள் முன்னிலையில் பேசிக் காட்டிட வேண்டும். புதியவர்களை விட, பழகியவர்கள் முன்னால் பேசுகிறபோது பயமில்லாமல் பேச முடியும்.

இல்லையெனில், கண்ணாடி முன் நின்று, பேசிப் பயிற்சி செய்யலாம். பேசுகிற போது, உங்கள் முகம் எப்படி இருக்கிறது, எங்கெங்கே என்ன தப்பு செய்கிறீர்கள் என்பதையெல்லாம் நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

மூன்றாவதாகப் பள்ளிக்கூட மேடையில் நீங்கள் பேசுகிறபோது, எதிரே அமர்ந்திருப்பவர்கள், பயங்கரமான மிருகங்களோ, கொடிய மனிதர்களோ இல்லை. உங்களைப் போன்ற, உங்கள் பேச்சைக் கேட்பதற்காகக் கூடியிருக்கிற சக மாணவ, மாணவியர் மற்றும் ஆசிரியர்கள்தான். அவர்களைப் பார்த்து வீண் பயம் அவசியமில்லை என்று உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ள வேண்டும்.

கடைசியாக ஒரு விஷயம். முதலில் மேடை ஏறுகிற போது பயமாக இருக்கிறது என்பதற்காக, விட்டு விடாமல், தொடர்ந்து பேசிப் பாருங்கள். நீங்கள் ஒரு நல்ல பேச்சாளராகி விடுவீர்கள்.

பாரதிய வித்யா பவன் இணைய தளத்தில் கிடைத்தது இந்த உபயோகமான விஷயம்.

• மேரி கியூரி



அடுத்தபடியாக, சில அதிசயமான தகவல் களைப் படிக்கலாமா?

● 1962ம் வருடம் அக்டோபர் எட்டாம் தேதி, வடகொரியாவில் நடந்த தேர்தல் மிகவும் விசித்திரமானது. ஆம்! தேர்தலில் நூறு சதவீத வாக்குப் பதிவாகியது. அத்தனை வாக்காளர்களுமே கொரிய தொழிலாளர் கட்சிக்கு வாக்களித்திருந்

தார்கள்.

● தபால் கார்டுகளை முதன் முதலில் பயன்படுத்திய நாடு எது தெரியுமா? ஆஸ்திரேலியா.

● இரண்டு முறை நோபெல் பரிசு பெற்ற பெருமைக்குரியவர் மேரி கியூரி என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் ஃபிரான்ஸ் நாட்டின் முக்கியஸ்தர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஃபிரெஞ்சு அகாடமி என்கிற கௌரவம் மிகுந்த அமைப்பில், மேரி கியூரி உறுப்பினராக விரும்பியபோது, அவர் பெண் என்ற ஒரே காரணத்துக்காக, அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

● அணு சக்தி உற்பத்தி செய்யத் தேவையானது யுரேனியம். ஒரு டன் யுரேனியத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யும் சக்திக்கு இணையான சக்தியை, நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்ய வேண்டுமெனில், மொத்தம் 30 ஆயிரம் டன் நிலக்கரி தேவைப்படும்.



● ஒரு மில்லியனை, எண்ணால் எழுதினால் அதில் ஏழு இலக்கங்கள் வருகின்றன அல்லவா? (1,000,000) அதையே மில்லியன் என்று ஆங்கிலத்தில் எழுதிப் பாருங்கள். ஏழு எழுத்துக்கள் இதில் இருக்கின்றன!

● ஒரு தமாஷ் பழமொழி சொல்லட்டுமா?

யாராவது கஷ்டப்படுகிற போது, அவருக்கு நீங்கள் உதவி செய்தால், உங்களை அவர் மறக்கவே மாட்டார் - குறிப்பாக அவருக்கு மறுபடி கஷ்டம் வருகிற போது...


அடுத்தது ஜோக்ஸ் நேரம்.

ஒரு மருந்துக் கடையின் முன்னால் வேகமாக வந்த ஒரு கார் நின்றது. ஓடி வந்த டிரைவர், "உங்களிடம் விக்கலை நிறுத்த மருந்து ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டார்.

உடனே கடைக்காரர், "விக்கலை நிறுத்த மருந்தே தேவையில்லை; இதோ பார் புது டெக்னிக் செய்து, விக்கலை நிறுத்திக் காட்டுகிறேன்" என்று சொன்னபடியே, ஒரு தம்ளர் ஜில் தண்ணீரை எடுத்து, டிரைவர் முகத்தில் வீசிக் கொட்டினார்.

"என்ன! விக்கல் நின்று விட்டதல்லவா?" என்று பெருமையாகக் கடைக்காரர் கேட்க, டிரைவர் சொன்னார்: "விக்கல் எனக்கு இல்லை; காரில் உட்கார்ந்திருக்கும் என் முதலாளிக்கு!"

தொகுப்பு : **கௌதம் ராம்**





அன்புள்ள ஜக்கு... மரவட்டைக்கு எத்தனை கால்கள்?

● என்.சித்தார்த், கோவை

? ஆம்புலன்ஸில் ƎƆИA⅃UᗺMA என்று மிரர் இமேஜில் எழுதுவது ஏன்?

உங்கள் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. ஆம்புலன்ஸ் என்பது உயிர் காக்கும் அவசரத் தேவைக்கு உதவும் வாகனம். அவசரமாக வாகனம் செல்லும் போது மற்ற வாகனங்கள் விலகி வழி விட வேண்டும். முன்னால் செல்லும் வாகனங்களின் கண்ணாடியில் AMBULANCE என்ற எழுத்துகள் நேராகத் தெரிந்து, வழிவிட வேண்டும் என்பதால் வாகனத்தில் மிரர் இமேஜில் எழுதப்படுகிறது.

● சி. பவித்ரா, மதுராந்தகம்.

? ஜல்லிக்கட்டில் மாடுகள் சிவப்பு நிறத்துணியைக் கண்டு மிரள்வது ஏன்?

உண்மையில் மாடுகளுக்கு நிறத்தை அறியும் திறன் கிடையாது. எல்லாப் பொருட்களும் கறுப்பு வெள்ளையாகவே தெரியும். மாடுகள் எதிரே கையில் துணியோடு பரபரப்பாகச் செயல்படும் மனிதர்களைக் கண்டுதான் மிரள்கின்றன. சிவப்பு இன்றி வேறு நிறத் துணியை எடுத்து ஆட்டினாலும் மாடு மிரளத்தான் செய்யும்.


● ஆர். மோகன் பாபு, ஏரல்

? ATM என்பதன் விரிவாக்கம் என்ன?

Automatic Teller Machine என்பதன் சுருக்கம். தமிழில் தானியங்கி பணம் வழங்கும் நிலையம்.



● ஏ.டி.எம். மிஷின்



● அ. ப்ரியா, சென்னை

? எனக்குக் கணக்கு என்றால் ரொம்பவே பயம். (இதுக்கு என் எட்டாம் வகுப்பு ஆசிரியர்தான் காரணம்) இப்பொழுது நான் பதினோராம் வகுப்பு படிக்கிறேன். வகுப்புத் தேர்வுகளில் நிறைய மதிப்பெண் வாங்கி விடுவேன். ஆனால் பரீட்சையில் பயம் வந்து விடுவதால் எனக்குத் தெரிந்த விடைகளைக் கூட சரியாக எழுத முடிவதில்லை. நான் என்ன செய்வது?

'யானை பிணைத்த தளை' என்று தமிழிலக்கியத்தில் ஒரு தொடர் உண்டு. யானைக்குட்டியை ஆரம்பத்தில் சிறிய கழியைத் தரையில் அடித்து (தளை) அதில் பிணைப்பார்கள். அல்லது சிறிய மரக்கிளையில் கட்டி வைப்பார்கள். அது முதலில் இழுத்துப் பார்த்து, மோதி, முயன்று, பிறகு அங்கேயே நின்று பழகி விடும். யானை வளர்ந்து பெரிதாகி வலிமையாக ஆன பின்னர் போர்களுக்குச் சென்று கோட்டை, மதில்களையெல்லாம் இடித்து உடைத்து விடும். ஆனால் திரும்பி வந்தபின் அதே தளையில், மரக் கிளையில் கட்டுவார்கள். கட்டியாயிற்று, இனி நகர முடியாது என்ற நினைப்பில் அதுவும் அங்கேயே நின்று விடும்.

அதுபோலத்தான், எட்டாவது வகுப்பில் ஆசிரியர் அல்லது கணக்குப் பாடம் பயமுறுத்திவிட்டது என்றால், இப்போது வளர்ந்து பதினோராவது வந்தபின்னும் பயப்பட வேண்டுமா என்ன? உங்கள் வளர்ச்சியையும் அறிவின் வளர்ச்சியையும் புரிந்து உங்கள் திறமையை உணர்ந்து கொண்டால், கணக்குப் பாடம் மட்டுமென்ன, இன்னும் எத்தனையோ சாதனைகள் செய்யலாம்.

● கே.ஜான்சிராணி, திருத்துறைப் பூண்டி.

? மரவட்டையின் கால்களை எண்ணிப் பார்த்தது உண்டா?

மரவட்டையைத் தொட்டாலே சுருண்டு விடும். அதை எப்படி எண்ணிப் பார்ப்பது? 30 முதல் 300 கால்கள் வரை மரவட்டைக்கு இருக்கும்.

● எஸ். கிருஷ்ணன், ஆண்டிபட்டி

? பள்ளி வாசலில் விற்கும் ஜவ்வு மிட்டாய், மாங்காய் பத்தை, பனம் பழம் ஆகியவற்றைச் சாப்பிட்டது உண்டா? அருமையான சுவையாக இருக்கும்!

நீங்கள் சொல்லும் பொருட்களை வீட்டில் சாப்பிட்டிருக்கிறேன். ஆனால், பள்ளி வாசலில் வாங்கிச் சாப்பிட்டது இல்லை. ஈ மொய்க்கும் பண்டங்கள் நோயை உண்டு பண்ணும் என்பது உங்களுக்கும் தெரியும். கவனமாய் இருப்பது நல்லது கிருஷ்ணன்.

● எல். பானுமதி, திருச்செந்தூர்

? ஓரிகாமி என்றால் என்ன?

காகிதம் மடிக்கும் கலை என்பதுதான் ஜப்பானில் ஓரிகாமி என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கலை ஜப்பானில் மிகவும் பிரபலம். கோகுலத்தில்கூட ஓரிகாமி வெளிவந்திருக்கிறது.



நவீன விதிமுறைகளின்படி முதல் உலக ஹெவி வெய்ட் சாம்பியன்ஷிப் நடந்த ஆண்டு 1892 - ஜிம் கார்பட், ஜான் சலிவன் என்ற இருவரும் போட்டியிட்டார்கள்.

ஜோரா சிரிங்க!



"நீங்க எழுதின பரபரப்பான நாவலோட முதல் பக்கத்துல 'Go slow'ன்னு எழுதியிருக்கீங்களே ஏன்?"

"என்னோடது 'திருப்பங்கள்' நிறைந்த கதையாச்சே!

- க. தனலட்சுமி,
மயிலாடுதுறை

"என் பையன் எல்லா பாடத்திலேயும் 98%க்கு மேலே வாங்கி இருக்கான். மெடிகல் சீட் கிடைக்கும்னு தோணுது."

"கண்டிப்பாகக் கிடைக்கும் சார்!"

"இப்பத்தானே எல்.கே.ஜி படிக்கிறான். எல்லா வகுப்பிலேயும் இப்படியே வாங்கணுமே!"

- ஆர். சாரதா,
சென்னை.





"காலண்டரைப் பார்த்துட்டு ஏண்டா கூரையையே வெறிக்க வெறிக்க பார்த்துக்கிட்டிருக்கே?"

"இன்னைக்கு 'மேல்நோக்கு' நாள்னு போட்டிருக்கே?"

- சீர்காழி வி. ரேவதி

"அப்பா, ஏலகிரி எங்க இருக்கு?

"எனக்கு தெரியலைடா. ஒரு வேளை உங்கம்மா வழக்கம் போல பழைய துணிகளோட சேர்த்துக் கட்டி வெச்சிருப்பாள்!"

- ஆர். எஸ். பிரபு,





• விழாவில் மாணவியர்

கோகுலம் சுழல் கோப்பை யாருக்கு?

எல்லோரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு கேள்விக்குப் பதில் கிடைத்துவிட்டது. 2002ம் ஆண்டு கோகுலம் சுழல் கோப்பை, தூத்துக்குடியில் உள்ள புனித அலாய்சியஸ் பள்ளிக்குக் கிடைத்திருக்கிறது.

1998 ஆம் ஆண்டு சுழல் கோப்பைத் திட்டம் உருவானது. இது வரை வத்தலகுண்டு, செந்துறை, ஆண்டிப்பட்டி, மேலச்சீத்தை பள்ளிகள் கோப்பையைப் பெற்றிருக்கின்றன. புனித அலாய்சியஸ் பள்ளி நான்கு ஆண்டுகளாக நமக்கு நன்கு அறிமுகமான பள்ளி. நமக்கு மட்டுமின்றி, தூத்துக்குடியில் சிறியவர் முதல் பெரியவா வரை அனைவருக்கும் இந்தப் பள்ளியைப் பற்றித் தெரிந்திருக்கிறது. அவ்வளவு புகழ் பெற்ற பள்ளி.

78 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்கது இந்தப் பள்ளி. கல்வி பயில்விப்பதிலும், நல்லொழுக்கத்தைப் போதிப்பதிலும் முத்து மாநகரின்



• துர்கா காத்யாயனி, சபீதா, செளம்யாயனி

முதன்மைப் பள்ளியாக விளங்குகிறது.

இரண்டாயிரம் மாணவியர் இங்கு படிக்கின்றனர். படிப்பில் மட்டுமின்றி, கலைகள், விளையாட்டுகளிலும் இப்பள்ளி மாணவியர் சிறந்து விளங்குகின்றனர். குறிப்பாக மகளிர் பள்ளிகளுக்கு இடையேயான ஹாக்கிப் போட்டியில், மாநில அளவில் வென்று சுழற் கேடயமும் தங்கப் பதக்கமும் பெற்றுள்ளனர்.

இது தவிர, பள்ளியில் தேசிய மாணவர் படை, செஞ்சிலுவைச் சங்கம், சாரண, சாரணியர் இயக்கம் போன்றவையும் செயல்பட்டு வருகின்றன.

"எங்கள் பள்ளியின் முக்கியக் குறிக்கோள் போட்டிகள் அனைத்திலும் கலந்து கொள்வதுதான். வெற்றி, தோல்வியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தன்னம்பிக்கையுடன் கலந்து கொள்வதுதான் முக்கியம். அதிக போட்டிகளில் கலந்து கொண்ட பள்ளிக்கு என்று ஒரு விருது, எங்கள் பள்ளிக்குக் கிடைத்திருக்கிறது" என்று பெருமையுடன் கூறினார் தலைமை ஆசிரியை.

டிசம்பர் 29 அன்று சுழல் கோப்பை வழங்கும் விழா. ஒரு வாரமாக நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின் நிறைவு விழாவும் அன்று சேர்ந்துகொண்டது. பள்ளி மாணவியர், ஆசிரியர்கள் முகத்தில் சந்தோஷம். பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவர் ஃபெனி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பரதம், கிராமிய நடனம், கவிதை வாசித்தல், பரிசு வழங்கல் என்று நிகழ்ச்சிகள் அற்புதமாக நடந்தேறின.



• பள்ளி ஆசிரியையருடன்



• இடமிருந்து வலமாக தலைமை ஆசிரியை, தாளாளர், ஃபெனி மற்றும் மாணவியர்

ஃபெனி அவர்கள் சுழல் கோப்பையை வழங்க, தலைமை ஆசிரியை, தாளாளர் மற்றும் கோப்பை பெறக் காரணமாயிருந்த துர்கா காத்யாயனி, சௌம்யாயனி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். விழாவுக்கு இரண்டு சகோதரிகளின் பெற்றோரும் வந்திருந்தனர். சென்ற ஆண்டு படைப்புகளை அனுப்பிய

இந்த ஆண்டு 45 பள்ளிகள் போட்டியில் கலந்து கொண்டன. அதில் முதல் 5 இடங்களைப் பெற்ற பள்ளிகள்:

I. புனித அலாய்சியஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.
II. ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை.
III. சுமேரியல் ஜெயின் பப்ளிக் பள்ளி, புதுடெல்லி.
IV. பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி, மடிப்பாக்கம், சென்னை.
V. அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூரர்.

மாணவி சபீதாவும், இவர்களுடன் சேர்ந்து கொண்டார். ஒரு பள்ளி சிறந்து விளங்க ஆசிரியர் - பெற்றோர் - மாணவர்களிடையே சுமுகமான ஒத்துழைப்பு அவசியம் தேவை. அதை இந்தப் பள்ளியில் காண முடிந்தது.

"எப்படியாவது எங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்கணும்னு நாலு வருஷமா முயற்சி செஞ்சதுக்கு, நல்ல பலன் கிடைச்சிடுச்சு. கோகுலம் காம்ப்ளி மெண்ட்ரி காப்பி, யார் பெயருக்கு வருகிறது என்பதிலேயே போட்டி ஆரம்பித்து விடும். கோகுலம் தவிர, நிறைய மாத, வார, இதழ்களை நாங்கள் படிக்கிறோம். நானும் என் தங்கையும் எழுதுவதற்கும், படிக்கும் ஆர்வம் ஏற்படுவதற்கும் காரணம் எங்கள் பெற்றோர்தான்! பள்ளிப் படிப்புக்கிடையே மற்ற புத்தகங்கள் படிக்க முடியாது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" என்றார் பதினோராம் வகுப்பு படிக்கும் துர்கா காத்யாயனி.

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் சௌம்யாயனி "எனக்குப் படிப்பது, எழுதுவது தவிர, ஓவியம் வரைவதிலும் ஆர்வம் உண்டு. பல போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெற்றிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் எங்கள் படைப்புகள் வரும் போதும், ஆசிரியர்கள் மேலும் மேலும் எழுத ஊக்கப்படுத்துவார்கள். இந்த நிகழ்ச்சியை எங்கள் வாழ்வில் மறக்க முடியாது" என்றார்.

ஒவ்வொரு ஆண்டும் கோப்பையைப் பெறும் பள்ளி சொல்வது போல், "தொடர்ந்து மூன்று ஆண்டுகள் கோப்பையைவென்று எங்கள் பள்ளிக்கே சொந்தமாக்கி விடுவோம்" என்று இவர்களும் கூறியிருக்கிறார்கள்.

மற்ற பள்ளிகள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அடுத்த ஆண்டு சுழல் கோப்பையை உங்கள் பள்ளிக்குத் தட்டிச் செல்ல, இப்பொழுதே முயற்சி செய்யுங்கள். நான்கு ஆண்டு முயற்சிக்குப் பின்தான், தூத்துக்குடிக்கு இந்த வெற்றி கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. களத்தில் இறங்கப் போகும் பள்ளிகளுக்கு வாழ்த்துகள்!

அட்டையில்: **துர்கா காத்யாயனி, சௌம்யாயனி**

அட்டை மற்றும் வண்ணப்படங்கள்: **ஸ்ரீஹரி**





கிறிஸ்துமஸ் தாத்தாவின் பரிசு!
மோஹன்.சி
படம் : பிஜு
அப்பா, கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு கொடுப்பாராமே? அது உண்மையா?
ஆமாம் ஜான்! சிறிய பையைக் கட்டி வைத்தால் கிறிஸ்துமஸ் தாத்தா பரிசை வைப்பார்.
ஜானின் நெருங்கிய நண்பன் டேனி. பக்கத்து வீட்டில் இருப்பவன்.
டேனி, பையைக் கட்டி வைத்தால் கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு வச்சிட்டுப் போவாராம்.
அப்படியா! நானும் பையைக் கட்டறேன்.
கிறிஸ்துமஸ் தாத்தா சீக்கிரம் இந்தப் பையில் பரிசை வைப்பார்.
நாளைக்குக் காலையில் பையில் பரிசு இல்லைன்னா ஜான் வருத் தப்படுவான்.
ஆமாம்!
மறுநாள் காலை -
இந்தப் பரிசைப் பையில் வைத்து விடலாம்.
காலையில் ஜான் பார்த்தவுடன் எவ்வளவு சந்தோஷப் படப் போறான்னு பாருங்க.
அப்பா, அம்மா! எல்லோரும் பாருங்க. கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு வச்சிட்டுப் போயிருக்கார்.
நான்தான் பரிசை வச்சேன்னு ஜான்கிட்ட சொல்லக் கூடாது.



பின்னர்...
ஜான், என் பையில் கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு எதுவும் வைக்கலை.
பாவம் டேனி, பரிசு கிடைக்காததால் ரொம்ப வருத்தப்படறான்.
கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு வேலை அதிகம். இன்னிக்குக் கண் டிப்பாகப் பரிசு வைப்பார்.
சரி ஜான்.
நாளைக்குக் கிறிஸ்துமஸ். இன்னும் டேனிக்குப் பரிசு கிடைக்கலை. அவன் ரொம்ப வருத்தப்படறான். இதுக்கு ஏதாவது பண்ணணும்.
மறுநாள் காலை ஜான், டேனி வீட்டுக்குச் சென்றான்.
ஜான், கிறிஸ்துமஸ் தாத்தா எனக்கும் பரிசு வச்சிட்டுப் போயிருக்கார்.
நான்தான் பரிசு வச்சேன்னு ஜானுக்குத் தெரி யக் கூடாது.
ஆமாம். கண்டிப்பா கிறிஸ்துமஸ் தாத்தா தான் இந்தப் பரிசை வச்சிருப்பார். உனக் குச் சந்தோஷம்தானே?
ஆமாம் ஜான்!
சர்ச்சுக்குப் போகணும். நான் வரேன்.
ஜானும் டேனியும் மகிழ்ச்சியுடன் கிறிஸ்துமஸைக் கொண்டாடினர்.

ஆர். பொன்னம்மாள்



ஓடமோட்டிய கண்ணன்

அந்தண குலத்தில் பிறந்த கோமாபாய் உஞ்சவிருத்தி எடுத்து வாழ்ந்து வந்தாள். ஆனாலும், ஏகாதசிதோறும் பண்டரி புரம் சென்று பாண்டுரங்கனை வழிபட்டு வந்தாள்.

பீமா நதியிலே வெள்ளம் கரையைத் தொட்டுக் கொண்டு ஓடியது. நதியைக் கடக்க பல ஓடங்கள் சென்று கொண்டிருந்தன. அவள் ஒரு ஓடக்காரனிடம் சென்று, "ஐயா! நான் பரம ஏழை. கொஞ்சம் ரொட்டி மாவு தருகிறேன். அதை வாங்கிக் கொண்டு என்னை அக்கரையில் சேர்த்து விட மாட்டாயா?" என்று கெஞ்சினாள்.

ஓடமோட்டி எகத்தாளமாக, "பிச்சைக்காரிக்குப் பண்டரிபுரம் என்ன கேடு? உன்னைப் போல் நாலு பேருக்கு இரக்கப்பட்டால் நானும் கப்பரை ஏந்தவேண்டியதுதான்! உன் மாவை நீயே ரொட்டி செய்து சாப்பிடு" என்றான்.

கோமாபாய் படகைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். "சீ, கையை எடு! இதென்ன இம்சை!" என்றபடி தள்ளினான் ஓடக்காரன். தடுமாறி நீரில் விழுந்த கோமா குளிரில் நடுங்கியபடி, படகு போவதை ஏக்கத்தோடு பார்த்தாள். கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பொழிந்தது.

அப்போது ஒரு படகு அவளருகில் வந்தது. ஓடக்காரன், "அம்மணி! ஏன் அழுகிறீர்கள்? இருட்டி விட்டதே! வீட்டுக்குப் போகவில்லையா?" என்று அன்புடன் கேட்டான்.

கோமா, "தம்பி! விடிந்தால் ஏகாதசி. எத்தனையோ

மகான்கள் பண்டரிபுரத்துக்கு வந்து பஜனை செய்வார்கள். விட்டலனைப் பார்க்கவும், பஜனையைக் கேட்கவும் நான் பாக்கியம் செய்யவில்லை. இந்த மாவைப் பெற்றுக் கொண்டு நீயாவது என்னை அக்கரையில் சேர்த்து விடேன்'' என்று கெஞ்சினாள்.

''மாவெல்லாம் தரவேண்டாம். படகு சும்மாதான் போகிறது. நிறையப் பணம் சம்பாதித்து விட்டேன். ஏறிக் கொள்'' என்றான் ஓடக்காரன்.

''உன்னைப் போன்றவர்களும் இப்பூமியில் இருப்பதால்தான் மழை பெய்கிறது'' என்று புகழ்ந்தபடி ஓடத்தில் ஏறினாள் கோமா. படகு அக்கரை சேர்ந்தது. நன்றி கூறி விடை பெற்றாள் கோமா பாய்.

தசமி இரவு முழுவதும் பஜனை செய்தாள். விடிந்ததும் சந்திர பாகா நதியில் நீராடி பண்டரி நாதனை தரிசித்தாள். யாருக்காவது உணவளித்தால்தான் துவாதசி பாரணை பண்ணலாம். எல்லா இடத்திலும் அறுசுவை உணவிடு கையில் அவள் மாவை யாசிக்க எவர் வருவர்? மனம் வெதும்பி பண்டரி நாதனைப் பிரார்த்தித்தாள். ஏழைப் பங்காளனாயிற்றே விட்டலன்! பொறுப்பாரா?

ஒரு அந்தண வடிவில் வந்தார். கோமாவிடம் ''சப்பாத்தி இருக்கிறதா? வயிறு சரியில்லை! அரிசிச் சோறு சாப்பிட முடியாது! என்ன முழிக்கிறாய்? இருக்கா, இல்லையா? சீக்கிரம் சொல்! பசி பிராணன் போகிறது'' என்றார்.

மாவை நீட்டினாள் கோமாபாய்!

''இதோ பார்! பசியில் அசைந்தாலே குடல் வெளியே வந்துவிடும் போலிருக்கிறது. நான் விறகு தேடி ரொட்டி சுடுவதாவது! அதெல்லாம் ஆகக் கூடிய காரியமா?'' என்றான் மாய அந்தணன்.

கோமா பரபரப்பாக எழுந்து, சுள்ளி பொறுக்கி வந்தாள். மூன்று கல் கொண்டு அடுப்பமைத்தாள். மாவை உப்பு போட்டுப் பிசைந்து, சப்பாத்தி சுட்டு இலையில் வைத்து அந்தணரிடம் கொடுத்தாள்.

''பேஷ், பேஷ்! சில பேருக்கு வெல்லம், நெய் எல்லாம் சேர்த்தால் கூட கை மணம் வருவதில்லை! ரொம்ப ருசியாயிருக்கிறது'' என்று சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டார் அந்தணர்.

ருக்மிணி தேவி கிழவி வடிவில் ''ஓ, இங்கே உட்கார்ந்து ரொட்டி சாப்பிட்டாகிறதோ? எனக்கும்தானே பசி! என்னை விட்டுச் சாப்பிடுவது என்ன



நியாயம்?'' என்று கோபமாகக் கேட்க, கோமாபாய் மகிழ்ச்சியுடன் அவளுக்கும் இரண்டு சப்பாத்தி வைத்துக் கொடுத்தாள்.

அவர்கள் சாப்பிட சாப்பிட, மாவு வளர்ந்து கொண்டே வந்தது. ''ஐயா, தாங்கள் யார்? தாங்கள் அதிதி அல்ல! அந்த மாயக் கண்ணனே! தங்கள் நிஜ வடிவை நான் தரிசிக்கும் அதிர்ஷ்டம் கிடைக்குமா? எத்தனையோ பக்தர்கள் வெண் பொங்கலும், சுண்டலும், சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும், தயிர் சாதமும் வைத்துக் கொண்டு காத்திருக்க, இந்த வறட்டு ரொட்டியைத் தின்ன வந்தீரே'' என்று உருகினாள்.

அவள் கண்களுக்கு ருக்மிணி சமேதராக கண்ணன் தரிசனம் கொடுத்தார்.

''கோமாபாய்! அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப, இன்ப துன்ப நிகழ்ச்சிகள் நடக்கின்றன. உயிர்களிடத்தில் எங்களுக்குப் பாரபட்சம் இல்லை! அப்படி இருந்தால் உனக்காகப் படகோட்டி வருவாரா?'' என்றாள் ருக்மிணி.

கோமாவுக்குப் பேச்சே வரவில்லை!

''கோமா! பக்தி செய்து கொண்டிரு. மோட்சம் கிடைக்கும். தாழ்வு மனப்பான்மையை விடு'' என்று கூறி அவள் தலையில் கை வைத்து ஆசீர்வதித்து மறைந்தார் பாண்டு ரங்கன்!



டாக்டர் கு. கணேசன்



பசி உண்டாவது எப்படி?

● **ஸ்ரீ. ரகுராமன், ஆண்டிமடம்**

? நம் வாயில் உமிழ்நீர் எவ்வாறு சுரக்கிறது?

! நம் வாய்க்குழியில் மூன்று ஜோடி உமிழ் நீர்ச்சுரப்பிகள் உள்ளன. கன்னத்திலும், காதின் முன்புறமாகவும் கீழாகவும் உள்ளது 'பரோடிட்' சுரப்பி. கீழ்த்தாடையின் அடிப் பக்கப் பள்ளத்தில் அமைந்துள்ளது கீழ்த்தாடை அடிச்சுரப்பி. நாக்கின் அடியில் உள்ளது நாக்கு அடிச்சுரப்பி. இவற்றில் உள்ள ஆயிரக்கணக்கான சுரப்பி செல்கள் இடைவிடாது உமிழ்நீரைச் சுரந்து கொண்டிருக்கின்றன. உண்ணும்போது அதிக மாகவும் மற்ற நேரங்களில் சிறிது குறைவாகவும் உமிழ்நீர் சுரக்கும். மொத்தத்தில் இவை தினமும் சுமார் 1½ லிட்டர் உமிழ்நீரைச் சுரக்கின்றன. நாம் உணவைப் பார்த்ததும் அல்லது உணவின் வாசனை மூக்கிற்கு வந்ததும் அல்லது உணவு வாய்க்கு வந்ததும் வாயில் உள்ள உணர்வு நரம்புகள் தூண்டப்படும். அந்தச் செய்தி மூளையின் முதுகுளத்திற்குச் சென்றதும் அது உமிழ்நீர்ச் சுரப்பிகளைத் தூண்டி விடும். உடனே உமிழ்நீர் அதிகமாகச் சுரக்கத் துவங்கிவிடும். இந்த உமிழ்நீர், உமிழ்நீர் நாளங்கள் வழியாக வாய்க்குழிக்குள் வந்து சேரும். இதயம் துடிப்பதைப் போல, உமிழ்நீர் சுரப்பதும் ஓர் அனிச்சைச் செயலாக நம் உடலில் நடந்து கொண்டிருக் கிறது.

● **ச. ஜகதீஷ், சென்னை - 45.**

? பசி எப்படி உண்டாகிறது டாக்டர்?

! குளுக்கோஸ் எனும் சத்து நம் உடல் இயக்கத்திற்குத் தேவையான சக்தியைத் தருகிறது. குளுக்கோஸை நாம் சாப்பிடுகின்ற உணவு மூலம்தான் பெறுகிறோம். சாதாரணமாக நம் ரத்தத்தில் குளுக்கோஸின் அளவு 80 மி.கி முதல் 120 மி.கி வரை இருக்க வேண்டும். இந்த அளவு 80 மி.கிக்குக் கீழ் குறையும்போது, மூளையில் 'ஹைப்போதலாமஸ்' எனும் பகுதியில் உள்ள பசி மையம் தூண்டப்படும். உடனே அது பசியைத் தூண்டுமாறு வேகஸ் நரம்பு மூலம் இரைப்பைக்குக் கட்டளையிடும். இரைப்பையில் 'ஹிஸ்டமின்' எனும் வேதிச்சுரப்பு அதிகமாகும். இது இரைப்பைச் சுவரில் உள்ள தசை இயக்கங்களைத் தூண்டி அமிலச் சுரப்பை அதிகரிக்கும். இப் போது வயிற்றைப் பிசைகின்ற உணர்வு ஏற்படும். இதைத்தான் 'பசி' என்கிறோம்.

● **க. துளசிராமன், கடம்பரவாழ்க்கை**

? சாதாரணமாக நாம் சாப்பிடும் உணவு வயிற்றை அடைந்த பின்பு தலைகீழாக நின்றால்கூட வாய்வழியாக வெளிவருவதில்லை. வாந்தியெடுக்கும்போது மட்டும் எப்படி உணவு வெளிவருகிறது?


! நாம் சாப்பிடும் உணவு, உணவுக்குழாய் வழியாக இரைப்பைக்குச் செல்வது

அனைவருக்கும் தெரியும். நம்மில் பலர் உணவுக்குழாய் என்பது ஒரு பிளாஸ்டிக் குழாய் போல் இருக்கும் என்றும் உணவை விழுங்கியதும் 'தொபுகடீர்' என்று இரைப்பைக்குள் விழுந்துவிடும் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அப்படியில்லை. இது ஒரு தசைக்குழாய். மூன்று வகைத் தசைகள் இதில் உள்ளன. இவை சுருங்கி விரியும் தன்மையுள்ளவை. உணவுக் குழாயின் ஒரு பகுதி சுருங்கும்போது மறுபகுதி விரியும். இந்த இயக்கங்கள் அலை அலையாக- ஒரு மண்புழு நகர்வதைப் போல - மேலிருந்து கீழ் நோக்கி நகரும்போது தன்னிடம் வந்து சேரும் உணவையும் தள்ளிக் கொண்டு சென்று இரைப்பையில் சேர்க்கும். உணவுக்குழாய்க்கு இரண்டு கதவுகள் உண்டு. உணவுக்குழாயின் துவக்கத்தில் குரல் வளைமூடி (Epiglottis) எனும் முதல் கதவும் அதன் முடிவில் சுருக்குத்தசை (Sphincter) எனும் இரண்டாவது கதவும் உள்ளன. முதல் கதவானது சாதாரணமாக உணவுக் குழாயை மூடியே இருக்கும். உணவுக் கவளம் வரும்போது, மட்டும் இது திறந்து வழிவிடும். பின்பு மூடிக் கொள்ளும். உணவு கீழே இறங்கி வரும்போது இரண்டாவது கதவு திறந்து வழி விடும். உணவு இரைப்பையை அடைந்ததும், இந்தக் கதவும் மூடிக் கொள்ளும். இதனால்தான் உணவு வயிற்றை அடைந்த பின்பு தலைகீழாக நின்றால்கூட வாய்வழியாக அது வெளிவர இயல்வதில்லை. சரி, வாந்தியெடுக்கும்போது மட்டும் எப்படி அது வெளிவருகிறது? வாந்தி ஏற்படப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் ஏதாவது ஒன்று மூளையில் 'மெடுல்லா' பகுதியில் உள்ள வாந்தி மையத்தைத் தூண்டுகிறது. உடனே 'வாந்தி எடு' என்று வயிற்றுக்கு ஆணையிடுகிறது மூளை. அவ்வளவுதான். அடுத்த நொடியில் வயிற்றுத் தசைகளும் குடல் தசைகளும் சுருங்கி, மேல்நோக்கி அழுத்தம் தருகின்றன. இப்பொழுது உணவுக் குழாயின் இரு கதவுகளும் திறந்து கொள்ள, உணவுக்குழாய்த் தசைகள் தங்கள் அலை இயக்கங்களை எதிர்திசையில் திருப்புகின்றன. அதே நேரத்தில் வயிற்றில் உண்டாகும் அழுத்தம் ஒரு விசைபோல இயங்க வயிற்றில் உள்ளவை எல்லாமே வெளியில் வந்துவிடுகின்றன.

● **இ. குமரேசன், திருநெல்வேலி - 2.**

? உணவிலுள்ள சத்துகளை நம் உடல் எவ்வாறு பிரித்தெடுக்கிறது?

! நாம் உண்ணும் உணவில் மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுச்சத்துகள், தண்ணீர் ஆகியவை அடங்கியுள்ளன. இவற்றுள் முதல் மூன்று சத்துகள் மிகச் சிக்கலான மூலக்கூறுகளைக் கொண்டிருக்கின்றன. உணவு இரைப்பையில் செரிக்கப்பட்ட பின்பு இச்சத்துகள் எளிய மூலக்கூறுகளாக மாறுகின்றன. மாவுச்சத்து குளுக்கோஸ் எனும் ஒற்றைச் சர்க்கரையாகவும், புரதச் சத்து அமினோ அமிலங்களாகவும், கொழுப்புச்சத்து நீரில் கரையும் தன்மையையும் பெறுகின்றன. பின்பு இவை சிறுகுடலுக்கு வருகின்றன. சிறுகுடலின் உட்சுவரில் பல கோடிக் கணக்கான குடலுறிஞ்சிகள் உள்ளன. இவற்றில் உள்ள ரத்தத் தந்துகிகள், சர்க்கரை மற்றும் அமினோ அமிலங்களை உறிஞ்சுகின்றன. குடலுறிஞ்சியில் ரத்தத் தந்துகிகளை ஒட்டியுள்ள பால் குழல்கள், கொழுப்பு அமிலங்களையும் கிளிசராலையும் உறிஞ்சுகின்றன. தண்ணீர் சவ்வூடு பரவல் மூலமும் வைட்டமின்கள் விரிவுப்பரவல் மூலமும் உறிஞ்சப்படுகின்றன. பின்பு இவை எல்லாமே ரத்தத்தின் மூலம் கல்லீரலை அடைகின்றன. அங்கிருந்து அவை இதயத்திற்குச் சென்று, பொது ரத்த ஓட்டம் மூலம் உடல் முழுவதும் பயணித்துப் பலன் அளிக்கின்றன.



மாலதி

நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று!

சங்ககிரி மன்னர் நகரச் சோதனைக்கு மந்திரியுடன் அதிகாலையில் புறப்பட்டார். ஏர், கலப்பையுடன் மக்கள் உழவுக்குச் செல்வதையும், மாடுகளை வண்டியில் பூட்டி, சரக்கு எடுக்கப் போவதையும் பார்த்தார்.

பெண்கள் வாசல் தெளித்து கோலமிடுவதையும், வீட்டைப் பெருக்கி மெழுகுவதையும் கண்டார். வழியில் தென்பட்ட குளத்தில், மங்கையர் நீர் முகப்பதையும், துணி துவைப்பதையும், பாத்திரம் கழுவுவதையும் நோட்டமிட்டார்.

அமைச்சரிடம், "இவர்களும் நம் அரண்மனையிலுள்ள பெண்களைப் போன்ற மெல்லியலார் தானே! இவர்கள் எப்படி உழைக்கிறார்கள்! தன் வேலைகளைத் தானே செய்து கொள்வதுதான் சிறந்தது" என்றார்.

அமைச்சர் எதுவுமே பேசவில்லை!

அரண்மனைக்கு வந்ததும் அந்தப்புரத்திலுள்ள எல்லா வேலைக்காரர்களுக்கும் கணக்குப் பார்த்துப் பணம் கொடுத்து அனுப்பி விட்டார்.

மறுநாள் காலை வெந்நீர் போட்டுவிட்டு வந்து எழுப்பும் தாதியைக் காணவில்லை! அரசி விசாரித்த பிறகே அரசரின் செயல் தெரிந்தது. அரசரிடம் காரணம் கேட்டறிந்தாள்.

அரசி, பழக்கமின்மையால் அடுப்பெரிக்கும் போது கையைச் சுட்டுக் கொண்டாள். வெந்நீர் போட்டு எடுத்து வரும்போது, காலில் ஊற்றிக் கொள்ள, காலெல்லாம் கொப்பளங்கள்! காய் நறுக்குகையில் அரசியின் விரலில் வெட்டுப்பட்டு ஒரே ரத்தம்.

அரசி அமைச்சரிடம் இதற்கொரு நிவாரணம் தேடச் சொன்னாள். பணியாளர்களும் அமைச்சரிடம் தனியாக வந்து, திடீரென்று வேலையிலிருந்து நிறுத்தியதால் ஏற்பட்ட கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டனர். தங்களை மறுபடி வேலையில் சேர்த்துக் கொள்ளும்படி கெஞ்சினர்.



அமைச்சர் சொல்லிக் கொடுத்தபடி அரசி சமைக்காமல் இருந்தாள். அரசர் பட்டினி கிடக்க யார் பார்த்திருப்பார்கள்? தினம் ஒருவர் வீட்டிலிருந்து அறுசுவை விருந்தே வந்தது.

"எங்களை மட்டும் வேலை செய்யச் சொல்கிறீர்களே! நீங்களும் வயலில் இறங்கி உழுது காட்ட வேண்டும்" என்றாள் அரசி.


அரசர் முண்டாசு கட்டிக் கொண்டு வயலில் இறங்கி உழ, காக்காய் பிடிக்கும் கோஷ்டியினர், "நாங்கள் இருக்கும்போது நீங்கள் சிரமப்படுவதாவது!" என்று வற்புறுத்திக் கரையேற்றினர். அரசர் வெற்றியோடு ராணியைப் பார்த்தார்.

ராணி கஷ்டப்பட்டு சமைத்திருந்தாள். சாப்பிட அந்தப்புரத்திற்கு வந்த அரசர், அகப்பைக் கூட்டில் சங்கிலிகள், வளைகள், ஒட்டியாணம் போன்ற நகைகள் தொங்குவதைப் பார்த்தார்.


அவசர அவசரமாய் பீரோவைத் திறந்து பார்த்தார். அதில் இலுப்பச்சட்டி, தோசைக்கல், கரண்டிகள், தட்டுகள் வெண்கலப் பானை எல்லாம் இருந்தன.

"உனக்கென்ன பைத்தியமா? மாற்றி வைத்திருக்கிறாய்! அதது இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால்தான் ஒழுங்கு" என்றார்.

"அதையேதான் நானும் சொல்கிறேன். நீங்கள் செய்வதும் இப்படித்தானிருக்கிறது!" என்ற அரசி, 'எப்படி மடக்கினேன்!' என்று பெருமையோடு அமைச்சரைப் பார்த்தாள்!



"மந்திரி! இத்தனை நகைகளும் இடமில்லாமல் இப்படித் தொங்குவானேன்! எல்லாவற்றையும் விற்று படைபலத்தைப் பெருக்கு. குளங்களை வெட்டு. சாலைகள் அமை. மரங்களை நடு" என்று அரசர் அடுக்க, மந்திரி பேந்தப் பேந்த விழித்தார். அரசி மயங்கி விழுந்தாள்.



சொல்லுங்கள் விடை என்ன?

I) 1. கொதிக்கும் கிணற்றில் குதிப்பான்; கூச்சல் போட்டபடி குளிப்பான்; உடல் பருப்பான் - அவன் யார்?

2. விண்ணைத் தொடும் உயரம் உண்டு; கடுகு மடிக்க இலையில்லை - அது என்ன?

3. நட்டாற்றில் முட்டை மிதக்குது - அது என்ன?

4. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை. உள்ளே குளம்! - அது என்ன?

5. அடித்தாலும் உதைத்தாலும் போகாத பையன், நடந்தால் நடப்பான்; நின்றால் நிற்பான்; - அவன் யார்?

- வே. சுபஸ்ரீ, பத்தாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்.

II) 1. காய் காய்க்கும், பழம் பழுப்பதில்லை - அது என்ன?

2. வெள்ளைக் குதிரை வேலியைத் தாண்டும் - அது என்ன?

3. சின்னக் குருவிக்கு முழம் வால் - அது என்ன?

4. குட்டையைச் சுற்றி கோரை - அது என்ன?

5. தெரிந்து காய் காய்க்கும்; தெரியாமல் பூப் பூக்கும் - அது என்ன?

- த. சங்கர், பன்னிரண்டாம் வகுப்பு அ பிரிவு, அ. மே. நி. பள்ளி, நல்லூர்

III) 1. மேலிருந்தும் வருவான்; கீழிருந்தும் வருவான் - அது என்ன?

2. செய்வதைச் செய்யும், குரங்கல்ல; சிங்காரிக்க உதவும், சீப்பும் அல்ல, - அது என்ன?


3. வெள்ளை நிறச் சாமியார்; குளத்தங்கரையில் ஒற்றைக் காலில் தவம் இருக்கிறார் - யார் அவர்?


4. மரமேறும் மயில்சாமிக்கு முதுகிலே மூன்று கோடு- அவன் யார்?

5. வானத்தில் பறக்கும் பறவையல்ல. வட்டமிட்டுச் சுற்றும் விமானம் அல்ல - அது என்ன?


- ஆர். பிரசன்னா, காந்தி கிராமம், கரூர்.

விடைகள்: I) 1. அப்பளம், 2. சவுக்கு மரம்,3. பரிசல், 4. தேங்காய் 5. நிழல்
II) 1. முருங்கைக் காய், 2. பொரி, 3. கரண்டி 4. கண்முடி 5. அத்தி மரம்
III)1. தண்ணீர், 2. கண்ணாடி, 3. கொக்கு, 4. அணில், 5. பட்டம்.


யார் பலசாலி?
– வேணுவாரியத்
ஒருகாலத்தில் ஹார்ன்பில் பறவைகளின் அரசனாக இருந்தது. மற்ற பறவைகளை மிகவும் துன்புறுத்தி வந்தது.
ஐயோ... உதவி... உதவி...
மற்ற பறவைகள் எல்லாம் அரசனை வெறுத்தன. ஒருநாள் எல்லாம் கூடின.
குருவியை நாம் ஏன் அரசனாகத் தேர்ந்தெடுக்கக் கூடாது?
நீ சொல்றது சரி. குருவிக்கு அரசனாகக் கூடிய எல்லாத் தகுதியும் இருக்கு.
ஹார்ன்பில்லை எப்படி சம்மதிக்க வைக்கிறது?
எனக்கு ஒரு யோசனை.
ஆந்தையின் திட்டப்படி மரங்கொத்தியின் உதவியைப் பறவைகள் நாடின.
உன்னுடைய உதவி எங்களுக்கு அவசியம் வேணும்.
கண்டிப்பா செய்யறேன்.
சில நாட்கள் கழித்து -
அரசே, ரொம்ப நாட்களாக நீங்க ராஜாவா இருந்துட்டீங்க. எல்லா பறவைகளும் உங்களுடைய வலிமையை நிரூபிக்கணும்னு விரும்பறாங்க.
என்ன பண்ணணும்?
நீங்கள் உட்காரும் மரக்கிளை உடைந்து விழ வேண்டும். அப்படி விழவில்லை என்றால் யார் அப்படிச் செய்யறாங்களோ அவங்கதான் ராஜா.




சரி. எந்த மரக்கிளையில் உட்காரணும்?
அதோ. அந்த மரக்கிளையில் உட்கார்ந்தால் போதும்.
சரியான முட்டாள்கள். நான் மரக் கிளையை உடைச்சுக் காமிக் கிறேன்.
ஹார்ன்பில் மிக உயரத்திலிருந்து பறந்து வந்து....
...வேகமாகக் கிளையில் அமர்ந்தது.
என்ன இது? கிளை உடையவே இல்லை!
இப்பவே சொல்லிடறேன். அடுத்து யார் உட்காரப் போறாங் களோ அவங்க, நான் உட்கார்ந்ததை விடப் பெரிய கிளையில்தான் உட்காரணும்.
சரி. அடுத்து குருவிதான் உட்காரப் போகுது. நீங்க உட்கார்ந் ததை விடப் பெரிய கிளை.



குருவி கிளையை உடைச்சிடும்னு நீங்க எல்லாம் நம்பறீங்க. அப்படி உடைக்கலேன்னா நான்தான் எப்பவுமே ராஜா.
சரி, போட்டி ஆரம்பிக்கட்டும்.
மரங்கொத்தி மரக்கிளையை நன்றாகக் கொத்தி, உடையக்கூடிய நிலையில் வைத்திருந்தது.
குருவி வேகமாகப் பறந்து வந்து கிளையில் அமர, கிளை உடைந்தது.
குருவியால் எப்படி முடிந்தது?
ஆஹா! வெற்றி...வெற்றி! குருவி கிளையை உடைத்து விட்டது.
Email: warlath@ipath.net.in
அவமானம் அடைந்த ஹார்ன்பில் தன் பதவியை ராஜினாமா செய்து விட்டுப் பறந்தது.
அப்பாடி! ஹார்ன்பில்லின் கொடுமையான ஆட்சி முடிவுற்றது.
ஆந்தை கொடுத்த யோசனையால்தான் இது முடிந்தது. ரொம்ப நன்றி.

எஸ். சுஜாதா



முத்துச் சிப்பி

விமலாவும் வினோத்தும் கடற்கரையில் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். திடீரென்று விமலா "இந்த விளையாட்டுப் போதும் வினோத். மணலில் பளபளப்பாக இருக்கும் கிளிஞ்சல்களைச் சேகரிக்கலாம்" என்றாள். "நல்ல யோசனை" என்ற வினோத் உடனே செயலிலும் இறங்கினான்.

மணலில் கிளிஞ்சல்களைப் பார்த்தபடி வெகு தூரம் வந்து விட்டனர். "ஏய், வினோத்! இங்கே நாம ஒவ்வொரு கிளிஞ்சல்களாகத் தேடிட்டு வர்றோம். அங்கே பார், மலை மாதிரி குவிச்சு வச்சிருக்காங்க" என்றாள் விமலா.

"விமலா, இது முத்துக் குளிக்கிற இடம்னு நினைக்கிறேன். சிப்பியில் இருந்து முத்தை எடுத்துட்டு அதன் ஓடை இப்படி குவிச்சு வச்சிருக்காங்க. சரி, வா அந்தப் பாறை மேல கொஞ்ச நேரம் உட்காரலாம்" என்றான் வினோத்.

"வினோத்!" பாறைக்குக் கீழே ஒரு கிளிஞ்சல் இருக்கு. அது எனக்குத்தான்' என்றபடி வேகமாகக் கையில் எடுத்தாள் விமலா.

"வினோத், இந்தக் கிளிஞ்சல் மட்டும் வித்தியாசமா இருக்குப் பாரு" என்றாள் விமலா.

"விமலா, இது நாம இவ்வளவு நேரமும் தேடி எடுத்த சிப்பியின் ஒடு இல்ல. நிஜ சிப்பி என்று சொல்லி அதைப் பாறை மேல் வைத்தான் வினோத்.

"தம்பி, என்னைக் கடலுக்குள் தூக்கிப் போட்டுடு. நீ நல்லா இருப்பே" என்று முத்துச்சிப்பியிடமிருந்து ஒரு குரல் வந்தது.

"விமலா, சிப்பி பேசுது பாரு! சிப்பி நீதான் பேசறியே, கொஞ்ச நேரம்

எங்கள் கூட பேசிட்டு இருக்கக்க கூடாதா?'' என்று கேட்டான் வினோத்.

"நான் உங்க கூடப் பேசணும்னா இப்படி பாறையில் இருந்து பேச முடியாது. உயிர் போயிடும். தண்ணீர் இருக்கும் இடமா பார்த்து என்னை இறக்கி வைங்க. அங்கிருந்து உங்க கூடப் பேசறேன்'' என்றது முத்துச்சிப்பி.

"நான் உன்னைப் பழைய இடத்துலேயே விட்டுடறேன். ஆனால் நீ ஏன் கொஞ்சம் கூட அசையாமல் பிடிச்சு வச்ச கொழுக்கட்டை மாதிரி உட்கார்ந்திருக்கே?'' என்றபடி முத்துச்சிப்பியைத் தண்ணீரில் விட்டான் வினோத்.

"எனக்குத் தலை கிடையாது. கை, கால்கள் எதுவும் கிடையாது. அப்படி ஒரு வித்தியாசமான பிறவி. அதனாலதான் என்னால நீங்க பிடிக்கும்போது தப்பிக்க முடியலை'' என்று வருத்தத்துடன் கூறியது முத்துச்சிப்பி.



"உலகம் எங்கும் புகழ் பெற்ற பளபளப்பான முத்தைத் தரும் உங்களுக்கு இப்படி ஒரு உடல் அமைப்பா?'' என்று பரிதாபப்பட்டாள் விமலா.

"ஆமாம்! இப்படி ஒரு உடல் அமைப்பால் நாங்கள் எதிரிகளிடம் சுலபமாக மாட்டிக் கொள்கிறோம். பெண் சிப்பிகள் லட்சக்கணக்கில் முட்டையிடுகின்றன. நண்டு சங்கு நட்சத்திர மீன்கள் போன்ற எங்கள் எதிரிகள் வந்து முட்டைகளுடன் சேர்த்து சிப்பிகளையும் உணவாக்கிக் கொள்கின்றன. இதனால் லட்சக்கணக்கில் முட்டையிட்டாலும் மிஞ்சுவது சொற்பமே'' என்று கூறி நிறுத்தியது முத்துச்சிப்பி.



"எனக்கே மனசு கஷ்டமா இருக்கு. சரி, உங்க இனத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேன், சுவாரசியமா இருக்கு'' என்றாள் விமலா.

"நீங்கள் நவமணிகள் என்று சொல்கிறீர்களே, அதில் முத்தும் ஒன்று. நாங்கள் மெல்லுடலிகள் (Mollusca) இனத்தைச் சேர்ந்தவர்கள். மென்மை

யான உடலைப் பாதுகாப்பதற்குத்தான் இந்த ஓடு. ஓடு சுண்ணாம்புப் பொருளால் ஆனது. ஓட்டின் உட்புறம் வெண்மையாக இருக்கும்...'' - முத்துச்சிப்பி.


''சிப்பி, ஒரு முக்கியமான விஷயம். தலை, கை எல்லாம் இல்லையே! அப்புறம் எப்படி சாப்பிடறே?'' என்றான் வினோத்.

''மிக நுண்ணிய பாசிகளும், பிளாங்டன் வகை நுண்ணிய உயிர்களையும் எங்கள் ஓட்டைத் திறந்து அப்படியே விழுங்கி விடுவோம்.''

''முத்து எப்படி உருவாகுதுன்னு சொல்லு?'' என்றான் வினோத்.

''சிப்பிதான் வரிசையா சொல்லிட்டு வருதே! அதுக்குள்ள உனக்கென்ன அவசரம்?'' என்று கோபப்பட்டாள் விமலா.

''ரெண்டு பேரும் சண்டை போடாதீங்க. எங்களுடைய உடல் மிகவும் மென்மையானது. ஓட்டுக்குள் உறுத்தலான எந்தப் பொருளாவது நுழைந்துவிட்டால் தவித்து விடுவோம். உங்கள் கண்களில் தூசிவிழுந்தால் எப்படி தவிப்பீங்க? அது மாதிரிதான். உடனே உறுத்தலைச் சமாளிக்க எங்கள் உடலிலிருந்து ஒரு வித நீர் சுரக்கும். இந்த நீர் கொழ கொழப்பாகவும் பளபளப்பாகவும் இருக்கும். நாளடைவில் இந்த நீர் இறுகி, உருண்டு, திரண்டு, ஒளி வீசும் முத்தாகி விடுகிறது'' - முத்துச் சிப்பி.



''முத்துக் குளித்தல் பற்றி கொஞ்சம் சொல்லேன்'' - என்றாள் விமலா.

''படகின் மேல் இருந்து ஒருவர் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பார். இன்னொருவர் அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கடலுக்குள் செல்வார். கீழே இருக்கும் முத்துச் சிப்பிகளை எடுத்து ஒரு கூடையில் வைத்து கயிற்றில் கட்டி மேலே அனுப்புவார். மேலே பெரிய இரும்பு கூடைகளில் தண்ணீர் இருக்கும். அதுக்குள் சிப்பிகளைப் போட்டு எடுத்துக் கொள்வார்கள். பிறகு சிப்பிகளைத் தரம் வாரியாகப் பிரிப்பார்கள். பெரிய சிப்பிகளுக்குள் சிறு முத்துத் துகளை வைத்து மூடி இரும்புக் கூடையில் இட்டு மீண்டும் கடல் நீருக்குள் வைப்பார்கள். நான்கு ஆண்டுகள் கழிந்ததும் வெளியே எடுப்பார்கள். இதற்குள் முத்து நன்கு வளர்ந்து பளபளப்புடன் இருக்கும். முத்தை எடுத்த பின் சிப்பியின் மேல் ஓட்டில் திரும்பவும் சிறு துளை இட்டு அதற்குள் உடைந்த சிறு முத்து துகளை வைத்து மூடி, கூடைக்குள் வைத்து மறுபடியும் கடலுக்குள் இறக்கி விடுவார்கள். இப்படித்தான் முத்து உருவாகிறது'' என்ற முத்துச்சிப்பி ''கிளம்புகிறீர்களா?'' என்று இருவரையும் பார்த்துக் கேட்டது.

''என்ன அவசரம்? கொஞ்சம் இரு. முத்து வெள்ளை நிறத்தில் மட்டும்தான் இருக்குமா?'' - என்று கேட்டான் வினோத்.

''இளஞ்சிவப்பு, நீலம், கறுப்பு நிறங்களில்கூட முத்துகள் உண்டு. வெள்ளை நிற முத்துகள் பரவலாக எல்லா இடங்களிலும் அதிகம் கிடைக்கின்றன. கறுப்பு முத்து அரியது; விலை மதிப்பு மிக்கது. முத்து மட்டுமின்றி எங்களது ஓடுகளும் உங்களுக்கு அதிகம் பயன்படுகின்றன. கிளிஞ்சல்களைக் கொண்டு பலவித அலங்காரப் பொருட்கள் செய்கின்றனர். கிளிஞ்சல்களைப் பக்குவப்படுத்தி தீவனத்தில் கலந்து கோழிகளுக்குச் சிறந்த சத்துணவாகத் தரப்படுகிறது. சரி, என்னை இன்னும் கொஞ்சம் தள்ளி தண்ணீருக்குள் விட்டு விடுங்கள். என்னைத் துன்புறுத்தாதற்கு நன்றி'' என்றது முத்துச்சிப்பி.

வினோத் கடலுக்குள் தள்ளி விட்டான். அடுத்த அலையில் முத்துச்சிப்பி மறைந்தது. இருவரும் முத்துச் சிப்பியைப் பற்றிப் பேசிக் கொண்டே வீடு நோக்கி நடந்தனர்.



வன உலா!

சடசடவெனப் பெய்த மழை நின்றதும் மலையடிவார கோவில் மண்டபத்திலிருந்த அந்த மாணவர்கள் வெளியே வந்தனர். மரங்களின் இலைகளிலிருந்து நீர்ச் சொட்டுகள் விழுந்து கொண்டிருந்தன.

பூங்குன்றன் 'நீலா... நீலா'' என்று சத்தமிட்டு அழைத்தான். சிறிது நேரத்தில் வனத்தின் ஆதிவாசிகளின் குடிசைப் பகுதியிலிருந்து நீலன் ஓடி வந்தான்.

"என்ன சாமி, கூப்பிட்டீங்களா?'' என்றான்.

"நீலா, நேற்று நானும் பூங்கோதையும் ஆன்மிக நூலகத்துக்குப் படிக்கப் போனோம். அங்கே இருந்த இவங்க எங்களையும் எப்படியாச்சும் நாளைக்கு வனத்துக்குக் கூட்டிட்டுப் போகணுமுன்னு கேட்டுக்கிட்டாங்க. அதான் இவங்களைக் கூட்டிட்டு வந்தோம். வேலாயுதம், ரமேஷ், இவன் மணி, இது குமார் எங்களை எங்காவது கூட்டிட்டுப் போயி காட்டு நீலா'' என்றான் பூங்குன்றன்.

"ஆமா நீலா, சாப்பாடெல்லாம் கொண்டு வந்திருக்கோம். இப்படியே புறப்படு, போகலாம்'' என்றாள் பூங்கோதை.

"நீலா, உன்னைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கோம். இன்னக்கிதான் பார்க்கிறோம்'' இது வேலாயுதம்.

"ஆமாப்பா! எங்களுக்கு நல்ல இடங்களா காட்டு''– இது ரமேஷ்.

"ஆபத்துல மாட்டி வச்சிராதேப்பா''– மணி.

"சரி, சாமி வாங்க போகலாம்'' என்று சொல்லிவிட்டு வனத்திலுள்ள ஒற்றையடிப் பாதை வழியே அவர்களை அழைத்துச் சென்றான். வேகமாகக் காற்று அடித்ததும் மரங்களின் இலைகளிலிருந்து மழைநீர் சலசலவென விழுந்தது.

மழைக்குப் புதரில் ஒதுங்கி யிருந்த மான்கள் இவர்களைக் கண்டதும் ஓடின. மான்களைக் கண்ட உற்சாகத்தில் அவர்கள் "ஹோ ஹோ"வென கூச்சலிட்டனர்.

''சாமி, சத்தமில்லாமல் வந்தாத்தான் ஏதாவது மிருகங்களைப் பார்க்கலாம்''– நீலன்.

புதரிலிருந்து ஓடிய புள்ளிமான் குட்டி ஒன்று பாதையில் விழுந்து விட்டது. ஓடிச் சென்று அதனைத் தூக்கிய நீலன் தனது தலைப்பாகைத் துணியை உதறி அந்தக் குட்டியைத் துடைத்துவிட்டான். கால்களை நீவிவிட்டு உடலில் சூடு பறக்கத் தேய்த்து விட்டான்.

''நீலா, இந்த மான்குட்டி ரொம்ப அழகா இருக்கில்லே."

"நீலா, நானும் தடவி விடட்டா?"

"ஏய், இதை எனக்குக் கொடுத்திடேன். நான் வீட்ல கொண்டு போய் வளர்க்கறேன்"– மணி.

''காட்டுப் பிராணிகளைக் கொண்டு போயி வீட்ல வளர்க்குறது சட்டப்படி குற்றம்" என்றாள் பூங்கோதை.

"ச்சூ போ" என நீலன் விரட்டியதும் மான்குட்டி துள்ளி ஓடிவிட்டது.

''ஏய், இதுவே புலிக்குட்டியா இருந்தா



என்ன செய்வே?"

"சாமி, பெரிய புலிக்குதான் பயம். குட்டியா இருந்தா ஒண்ணும் செய்யாது."

"தூர இருந்து அம்மா புலி பார்த் திருச்சின்னா?"

"எதுவா இருந்தாலும் நான் தப்பிச்சிடு வேன். இல்லேன்னா வனத்துலேயே பிழைக்க முடியுமா சாமி?"

"சரிப்பா, தூரத்துல மறைவில் புலி யிருந்தால் உனக்கு எப்படி தெரியும்?"

"மனித வாடை மிருகங்களுக்குத் தெரி யும். மிருகங்கள் வாடை எங்களுக்கும் தெரியும்."

"சரி, அப்படியிருக்கும் போது ஒன்றை ஒன்று எப்படி அடிச்சிக் கொன்னு திங் குது?"

"சாமி, மான் கூட்டத்தைப் புலி அடிச்சி கொல்லலேன்னா மான் கூட்டம் அதிக மாகி வனத்தையே தின்னு அழிச்சிடும். புலிக்கு மஞ்சள் நிறம், கறுப்புக் கோடுகள் இருக்கு. அது புல்லுக்காட்டுக்கு உள்ளே இருந்தா, புல் மாதிரி கோடுகள் இருப்ப தால் அது இருப்பது தெரியாது. அதனால தான் வேட்டைக்காரங்க கிட்ட இருந்து தப்பிக்குது. அதே சமயம் அது இருக்குறது தெரியாமதான் மான்கள் பக்கத்துல போயி மேயுது. அப்பப் பார்த்து புலி மானை அடிச்சிக் கொல்லுது."

"அடடா! எவ்வளவு பெரிய விஷ யத்தை நீலன் எவ்வளவு எளிமையா சொல்லிட்டான்! அதனுடைய நிறமும் கோடுகளும் புலியைத் தப்பிக்கவும் உதவுது, அதுவே மான்களை உணவாக்கிடவும் உதவுது. அருமை!" வேலாயு தம் வெகுவாகப் பாராட்டி னான்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல சாமி. இது எங்க எல் லாருக்கும் தெரிஞ்ச விஷயந் தான்"– நீலன்.

"சரி நீலா, ஆத்துப் பக்கம் போ. சாப்பிடலாம்" என்றான் பூங்குன்றன்.

ஏதோ சத்தம் வரவே அவர்கள் நின்று பார்த்தனர். இரண்டு குரங்குகள் சண்டை யிட்டவாறே "கார் பீர்" என்று கத்திக் கொண்டு கிளைகளில் தாவி ஓடின. சிறிது நடந்ததும் ஒரு சிற்றாறு குறுக்கிடவே, அவர்கள் பாறையில் அமர்ந்து உணவுப் பொட்ட லங்களை அவிழ்த்து சாப்பிட் டனர்.


பூங்கோதை தனக்கிருந் ததில் பாதியைத் தண்ணீரில் போட்டாள்.

"ஏன் சாப்பாட்டைக் கீழே போட்டே?"

"அங்க பாருங்க, மீன் கள் எப்படி சாப்பிடு துன்னு!" என்று சொல்லி விட்டு அவள் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் மீன் களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த னர்.

"சரி சாமி, வாங்க போகலாம்,



இந்தப் பாதை கல்லுங்கரடும், வேரும் விழுதுமா இருக்கும். பார்த்து வாங்க.''

அவர்கள் புறப்பட்டனர். அந்தப் பகுதி, மரங்கள் இல் லாமல் புல் மேடாக இருந்தது. ஆளுயரத்திற்கு அடர்ந்த புல் செழிப்பாக வளர்ந்திருந்தது.

புல்மேடு முடிந்து ஒரு இடம் வெற்று மண் மேடாக இருந்தது. முன்னால் நடந்து சென்று கொண்டிருந்த நீலன் ஓர் இடத்தில் நின்றான். அவர்களைச் சத்தமிடாமல் அருகில் வருமாறு சைகை காட்டினான். அவர்கள் அருகில் சென்றார்கள்.

ஒரு பாறையடிப் பள் ளத்தை அவன் காட்டினான். அவர்கள் பார்த்தனர். ஒரு ஜாண் நீளத்தில் பெரிய நட்டு வாக்காலி அதில் இருந்தது. கறுப்பு நிறத்தில் கொடுக்கைத் தூக்கிக் கொண்டு இருந்த அதைப் பார்க்கவே பயமாக இருந்தது. அருகில் சில குட்டி கள் வெண்மையாக ஊர்ந்து கொண்டிருந்தன.

''சாமி, நட்டுவாக்காலி இப்பதான் குட்டிகள் போட்டு கிட்டு இருக்கு. கொஞ்ச நேரம் இருந்து பார்ப்போம்.''

''நீலா, நட்டுவாக்காலி முதுகு வெடிச்சிதான் குட்டி போடும். அப்ப தாய் நட்டு வாக்காலி செத்துருமுன்னு எங்க அப்பா சொன்னாரே?''

''அதெல்லாம் இல்ல சாமி. இப்பதான் பார்க்குறீங்களே, குட்டிகள் போடுறதை''– நீலன்.

குமார் ஒரு சிறு கல்லை எடுத்துப் போட்டான். ஒரு குட்டியின் மேல் விழுந்ததும் அது செத்துவிட்டது. அருகில் இருந்த குட்டியின் ஒரு கால் ஒடிந்து விட்டது.

''ஏம்ப்பா கல் போட்டே? உன்னை யெல்லாம் வனத்துக்குள்ள கூட்டிட்டு வந்திருக்கவே கூடாது''– பூங்குன்றன் கோபத்துடன் கூறினான்.

''மன்னிச்சிடுப்பா. இனிமேல் இப்படி செய்ய மாட்டேன்'' குமார் சொன்னதும் நீலன்,

''சாமி காட்டுக்குள்ளே எந்த உசுரை யும் தொந்தரவு செய்யக் கூடாது'' என் றான்.

''சரி, நீலா.''

''சரி, எல்லோரும் கொஞ்சம் அப் படியே உட்கார்ந்து பார்த்துக்கிட்டு இருங்க.'' அவர்கள் அந்தப் பாறையைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டார்கள்.

மேகக் கூட்டம் அவர்களைத் தழுவிச் சென்றது.

அந்த நேரம் அருகில் இருந்தவர்கள் கூடத் தெரியவில்லை.

மேகம் விலகியதும் பளிச்சென வெளிச்சம் பரவியது. அவர்கள் நட்டு வாக்காலி இருந்த பள்ளத்தைப் பார்த் தனர்.

காலொடிந்த குட்டி அல்லாத மற்ற குட்டிகள் தாயின் முதுகில் ஏறிக் கொண் டன. கால் ஒடிந்த குட்டி ஏற முயற்சி செய்தது இயலவில்லை. தாய் தனது பெரிய கொடுக்கினால் குட்டியை முதுகில் ஏற, தூக்கிவிட முயற்சி செய்தது.

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவுகள்

நவம்பர் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பெரும்பாலோர் சரியான விடைகளையும் அளித்திருந்தனர். சரியான விடை அளித்த வர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சரியான விடை:

1. வாதாபிகொண்டான் – நரசிம்ம பல்லவர்
2. ஃபிடல் காஸ்ட்ரோ – கியூபா

என்ன செய்தும் அதனால் ஏற முடிய வில்லை. பாதி ஏறுவது, கீழே விழுவது... இப்படியாக இருந்தது.

தாய், தன் இடுக்கிப் போன்ற முன் கைகளால் இறந்து கிடந்த குட்டியைத் தூக்கி, வாயருகே கொண்டு வந்து மெல்லத் தின்றுவிட்டது. காலொடிந்த குட்டியையும் அப்படியே தின்று விட்டது. அவர்கள் அதனை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நீலா, இப்படியே எல்லாக் குட்டிகளையும் தாய் தின்று விடுமா?"

"ஒண்ணு ரெண்டை விட்டுட்டு மத்த குட்டிகளைத் தின்னுடுமுன்னு நானும் கேள்விப்பட்டிருக்கேன்"– பூங்குன்றன்.

"அடடா தான் போட்ட குட்டிகளையே ஒரு தாய் தின்னுமா? அநியாயமாக இருக்கே."

"நீலன் என்ன சொல்றான்னு கேட்போமே."

"தேள் வகையில் தாய் முதுகு வெடிச்சி குட்டி போடுமுன்னு சொல்றதும் பொய். குட்டிகளைத் தாய் தின்னுடுமுன்னு சொல்றதும் பொய் சாமி."

"இதோ இப்ப தின்னுருச்சே."

"சாமி, இது இப்ப செத்த குட்டியதான் தின்னது. அப்புறம் கால் ஒடிஞ்ச குட்டியவும் தின்னுருச்சி. ஏன்னா அது இனிமேல் பொழைக்காதுன்னுதான். உசுரோட இருக்கும் குட்டிகளைத் திங்காது. இப்ப இது திங்கலேன்னா இதனுடைய எதிரிங்க அரணை, ஓணான் வந்து செத்த குட்டியத்திங்கும். அதோட மத்த குட்டிகள் பக்கத்துலதான் இருக்குமுன்னு தேடி, சாப்பிட வந்துடும். அதான் தாயே தின்று விட்டது."

"எவ்வளவு விஷயம் எல்லாம் தெரிஞ்சி வச்சிருக்கே! எங்களுக்கும் சொல்விட்டே, நட்டுவாக்காலி கொட்டுனா ஆளு செத்துப் போவாங்களா நீலா?"

"ஆமா சாமி. உடனே வைத்தியம் பார்க்கல்லேன்னா விஷம் தலைக்கேறி செத்துப் போவாங்க."

"ஒரு உயிரினத்தின் வரலாறே இன்னைக்கித் தெரிஞ்சி கிட்டோம்."

"நீலனுக்கு நன்றிதான் சொல்லணும்."

"சரி சாமி, நேரமாச்சு, இறங்கலாம் வாங்க."

அவர்கள் இறங்கி நடந்தனர்.

---

3. பஞ்சாப்/ஹரியானா – சண்டிகர்
4. முகமது அலி – குத்துச்சண்டைவீரர்
5. காந்தியின் அரசியல் குரு – கோபாலகிருஷ்ணகோகலே
6. திமிங்கிலம் – பாலூட்டி
7. பூசணிக்காய்
8. இயான் போத்தம்

பரிசு பெற்றவர்கள்:

1. கே. அக்ஷயா, நான்காம் வகுப்பு, ஜவஹர் மேல் நிலைப்பள்ளி, நெய்வேலி.

2. கே.பாலாஜி, ஐந்தாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி, மதுரை.

3. எஸ். மதுசூதனன், ஜி.கே.ஷெட்டி விவேகானந்தா வித்யாலயா ஜூனியர் காலேஜ், அம்பத்தூர்.

4. ஆர்.எஸ். சதீஷ் குமார், எட்டாம் வகுப்பு, பெரியார் மணியம்மை மேல் நிலைப்பள்ளி, திருச்சி.

5. எல். ஸ்டான்லி செபாஸ்டின், ஒன்பதாம் வகுப்பு, லயோலா மேல் நிலைப்பள்ளி, குப்பைய நல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம்.




பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

மறக்க

நெகிழ்ச்சி!

நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போது திலகா என்று ஒரு மாணவி வெளியூரிலிருந்து வந்து சேர்ந்தாள். எனவே விடுதியிலிருந்து வருவாள். என்னிடம் நட்புக் கொள்ள மிகவும் விரும்பினாள்.



எனக்கோ ஏற்கனவே நிறையத் தோழிகள் இருந்தனர். அதனால் அவளை நான் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. ஒருநாள் கிராஃப் நோட்டு கொண்டு வரச் சொல்லி இருந்தார் கணித ஆசிரியை. எப்பொழுதும் சின்சியராக இருக்கும் நான் அன்று எப்படியோ கிராஃப் நோட்டை மறந்துவிட்டுப் பள்ளிக்குச் சென்றேன். முதல் பாட வேளையே கணிதம். நோட்டு கொண்டு வராதவர்களை எழுந்து நிற்கச் சொன்னார் ஆசிரியை. நான் தயங்கியபடி எழ முயன்றேன். கண்கள் கலங்க ஆரம்பித்து விட்டன. என்னைப் பார்த்த திலகா ஒரே நொடியில் தன்னிடமுள்ள கிராஃப் நோட்டை என் கையில் திணித்து விட்டு, அவள் எழுந்து நின்றாள். ஆசிரியையின் தண்டனையை ஏற்று ஒரு மணி நேரம் வெளியில் நின்றாள். இந்தச் சம்பவத்தை இப்பொழுது நினைத்தாலும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

- க. விமலாராணி
பன்னிரண்டாம் வகுப்பு,
புனித ஆன்ட்ரூஸ்
பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
இராமநாதபுரம்.

நாய்க்கு உதவி

எனக்கு நாய் என்றால் ரொம்ப பயம். ஒருநாள், சின்ன நாய்க்குட்டியை இரண்டு சிறுவர்கள் குச்சியால் அடித்து, விளையாடிக் கொண்டிருந்தனர். நாய்க்குட்டி வலியால் துடித்தது. எனக்கு மனசு கேட்கவில்லை. அந்தச் சிறுவர்களை விரட்டி விட்டு, கொஞ்சம் சாப்பாடு போட்டேன். மறுநாள் முதல், நான் பள்ளிக்குப் போகும்போது, வரும்போது என எப்போது வீதியில் நடந்தாலும் என்னைச் சுற்றிச் சுற்றியே வந்து கொண்டிருந்தது. நாய்க்குட்டியின் அன்புத் தொல்லையை என்னால் தாங்க முடியவில்லை.




என் அம்மாவிடம் சொன்னேன். நாயைப் பார்த்து, பயப்படாமல் விறுவிறுவென்று நடக்குமாறு கூறினார் அம்மா. அதே போல் செய்தேன். இப்பொழுதெல்லாம் தூரத்தில் நின்று வால் ஆட்டுவதுடன் சரி.

- ஆர். ஞானசுந்தரி, பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
மேட்டுப்பாளையம்.

முடியவில்லை...

எப்படி இருக்கு?

எங்கள் வகுப்பாசிரியர் தீபாவளி டிரஸ்



போட்டுக் கொண்டு வந்திருந்தார். வகுப்பில் நுழைந்ததும் எங்களைப் பார்த்து ''எனக்கு இந்த டிரஸ் எப்படிடா இருக்கு?'' என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டார். அதற்கு ஒரு மாணவன் ''இந்த டிரஸ்ஸில் நீங்க ஆசிரியர் மாதிரியே இல்லை. காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி இருக்கீங்க. ரொம்ப இளமையாத் தெரியுது'' என்றான். இன்னொரு மாணவன் எழுந்து, ''சார், நீங்க தீபாவளி அன்னிக்கு உங்க பையனுடன் மத்தாப்புக் கொளுத்தும்போது உங்க பையனுக்கு அண்ணன் மாதிரி தெரிஞ்சீங்க'' என்று கூறினான். ஆசிரியர் அடக்க முடியாமல் சிரித்தபடியே ''டேய் கொஞ்சம் விட்டால் நான் பால் வாங்கும்போது கைக்குழந்தை மாதிரி இருப்பேன்னுகூட சொல்லுவீங்கடா. உங்ககிட்டே போய் கேட்டேனே!'' என்று கூறிவிட்டுப் பாடத்தை ஆரம்பித்தார்.

- எஸ். பிரசாந்த்,
நெல்லையப்பபுரம்,
நெல்லை மாவட்டம்.

என்ன செய்தார்?

சமூக அறிவியல் ஆசிரியர், வரலாற்றுப் பாடம் நடத்தி முடித்துவிட்டு ''வ.உ.சி என்ன செய்தார்? திலகர் என்ன செய்தார்?'' என்று ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டு வந்தார். அடுத்து ''நேதாஜி என்ன செய்தார்?'' என்று ஒரு மாணவனிடம் கேட்டார். அவன் பதில் சொல்வதற்குள், கடைசி பெஞ்சில் இருந்த ஒரு மாணவன் எழுந்து, ''சரவணனிடம் பென்சில் கேட்டுக் கொண்டிருந்தேன். இனிமேல் நீங்கள் பாடம் நடத்தும்போது இப்படி கேட்க மாட்டேன் சார்!'' என்றான். எல்லோரும் ஒரு நிமிடம் திகைத்தோம். பிறகுதான் புரிந்தது. அவன் பெயர் நேதாஜி என்று. ஆசிரியர் நேதாஜி சுபாஷ் பற்றி, தான் கேள்வி கேட்டதாகக் கூறவும், அவன் மன்னிப்



புக் கேட்டுவிட்டு அமர்ந்தான்.

- ப. இராமகிருஷ்ணன்,
காயக்காடு.

பெட்ஷீட்

எங்கள் ஊர் அரசு மருத்துவமனைக்குத் தாத்தாவை அழைத்துச் சென்றிருந்தேன். நான் வெளியே நின்றிருக்க, தாத்தா மருத்துவரைப்

பாரக்க உள்ளே சென்றார். சிறிது நேரத் தில் கையில் மருந்துச் சீட்டுடன் வெளியே வந்தார் தாத்தா. ''பெட்ஷீட் வாங்கிட்டு வார்டுக்குப் போகச் சொன் னார் டாக்டர். புதுசா வாங்கணுமா, இல்லை வீட்ல இருந்து எடுத்துட்டு வர லாமான்னு நீ போய் டாக்டரிடம் கேட்டு வா'' என்றார். எனக்கு ஒன்றும் புரிய வில்லை. சிறிது நேரம் யோசித்து ''தாத்தா, டாக்டர் டயட் ஷீட்டை வாங் கிட்டுப் போகச் சொல்லியிருப்பார்''



என்று சொன்னேன். அவரும் அதனை ஆமோதிக்க அங்கிருந்து கிளம்பினோம்.

- த. பரதன், திருவாரூர்.

நூறு வயசு

செந்தில்குமார் என்ற மாணவன் எப்பொழுது பார்த்தாலும் எதையாவது தின்றுகொண்டே இருப்பான். ஒவ் வொரு பாடவேளைக்கு இடையிலும், ஆசிரியர் வருவதற்குள் நொடியில் தின்று முடித்து விடுவான். ஒரு நாள் அவன் தின்று கொண்டிருக்கும் பொழுது தமிழாசிரியர் வகுப்புக்குள் நுழைந்துவிட்டார். மிக்சர் பொட் டலத்தை மறைக்க அவன் முயலும் போது, கை தவறி கீழே கொட்டிவிட் டது. அவன் திருதிருவென்று விழித் தான். ''ஏன் இப்படி எப்பவும் தின்று கொண்டே இருக்கே?'' என்று ஆசிரியர்



கேட்டார். ''எனக்கு நூறு வயசு வாழ ணும்னு ஆசை சார். அதனால்தான் சாப் பிடறேன்'' என்றான்.

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந் தம்?'' என்றார் ஆசிரியர். ''நீங்கதானே நொறுங்கத் தின்றால் நூறு வயசுன்னு முன்னாடி ஒருநாள் சொன்னீங்க. அத னால்தான் நொறுக்குத் தீனி சாப் பிடறேன்'' என்று விளக்கினான். ''அடப் பாவி! நொறுங்கத் தின்றால் என்றால் நொறுக்குத் தீனி தின்பது என்பதல்ல. உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும். இனிமேல் வகுப்புக்குள்ளே நீ சாப்பிடுவதைப் பார்த்தால் என்ன தண்டனை கொடுப்பேன்னு தெரியாது'' என்று கூறி விட்டுப் பாடத்தைத் தொடர்ந்தார் ஆசிரியர்.

- எம். வினோத், சங்கரன்கோவில்.

வாண வெடிகள்

எங்கள் தமிழ் ஆசிரியரிடம் ஒரு மாணவன் ''வாண வெடி என்பதற்கு ரெண்டு சுழி 'ன'வா, மூணு சுழி 'ண'வா, எது சார் போட வேண்டும்?

மறக்க முடியவில்லை... மறக்க முடியவில்லை...

வானம் என்பதற்கு ரெண்டு சுழிதானே போடுகிறோம். வானத்தில் பறப்பதால்தானே அது வானவெடி? அதற்கு ஏன் மூணு சுழி 'ண' போட வேண்டும்?'' என்றான். ''நல்ல சந்தேகம். நல்ல விளக்கமான கேள்வி'' என்று, அவனைப் பாராட்டிவிட்டு, ''அம்புக்கு வடமொழியில் 'பாணம்' என்று ஒரு பெயர். அது தமிழில் 'வாணம்' என்று வரும். தீபாவளியில் கையிலிருந்து எறியும் வெடிகளை வாணம் என்று சொல்கிறோம். பாணத்தைப் போல எறியப்படுவதால் இத்தகைய வெடிகளுக்கு வாணம் என்று



பெயர் வந்தது. ஆகாச வாணம், வாணவெடிகள் என்றும் சொல்கிறோம். நீங்கள் கோவில் திருவிழாக்களில் வாணவெடிக்காரர்கள் கையினால் கொளுத்தி பாணத்தைப் போல எறிவதைப் பார்த்திருப்பீர்களே...!'' என்று விளக்கமாகவும், சுவையாகவும் புதிய தகவல்களுடன் சொன்னார் ஆசிரியர்.

- ஆர். வெங்கடேஸ்வரன்,
மயிலாடுதுறை.

கடுகு மழை

ஒருநாள் நானும் என் தங்கையும் பலூனை வைத்து விளையாடிக் கொண்டிருந்தோம். அதுவோ நேரம் ஆக ஆக, சிறிதாகிக் கொண்டே இருந்தது. நான் அதை ஊதி - ஊதிப் பார்த்தேன். ஊஹும்... பலூன் பெரிதாகவே இல்லை. பிறகு எங்கள் அம்மாவிடம் சென்று ''இதைச் சற்றுப் பெரிதாக ஊதிக் கொடுக்கிறீர்களா?'' என்று கேட்டேன். என் அம்மாவோ, உடனே, செய்யும் வேலையை விட்டு விட்டுப் பலூனை ஊதத் தொடங்கினார். நாங்களோ உற்சாகத்தில் ''இன்னும் பெரிதாக, பெரிதாக ஊதுங்கள்'' என்று கத்தினோம். அம்மாவும் ஊதினார், ஊதினார், ஊதிக்கொண்டே இருந்தார். திடீரென்று இடிபோல் ஒரு சத்தம். எங்களுக்கோ மழை பெய்தது போல் ஒரு சிலுசிலுப்பு. சற்றுக் குழப்பத்திற்குப் பிறகு பார்த்தால் ஹால் முழுவதும் ஏராளமான கடுகு கொட்டிக் கிடந்தது. ஏனென்றால் பலூனை ஆட்டும்பொழுது சத்தம் வர வேண்டுமென்று அதில் நாங்கள் கடுகு




போட்டு வைத்திருந்தோம். உடனே உணர முடியவில்லை என்றாலும் சற்று நேரம் கழித்து வயிறு குலுங்கச் சிரித்தோம்.

- எச். ஸ்ரீநந்தினி,
பதினோராம் வகுப்பு,
ஏசிசி மேல்நிலைப் பள்ளி,
சென்னை.

மறக்க முடியவில்லை... மறக்க முடியவில்லை...





* டாக்டர் ராஜேந்திர பிரசாத் 1950-1962 * டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் 1962 - 1967
* டாக்டர் ஜாகிர் ஹுசைன் 1967 - 1969 * வராஹகிரி வெங்கடகிரி 1969-1974 * ஃபக்ருதீன் அலி அஹமது 1974 - 1977
* நீலம் சஞ்சீவ ரெட்டி 1977 - 1982 * கியானி ஜெயில் சிங் 1982 - 1987 * ஆர். வெங்கட்ராமன் 1987 - 1992
* டாக்டர் சங்கர் தயாள் சர்மா 1992 - 1997 * கே.ஆர். நாராயணன் 1997 - 2002 * ஏ.பி.ஜே. அப்துல் கலாம் - 2002

ஜனவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

பிப்ரவரி

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	

மார்ச்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30	31					1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

ஏப்ரல்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

மே

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

ஜூன்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

ஜூலை

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		

ஆகஸ்ட்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
31					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30

செப்டெம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

அக்டோபர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

நவம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
30						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29

டிசம்பர்

ஞா	தி	செ	பு	வி	வெ	ச
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

2003

கோகுலம்

ஸ்மைல் ப்ளீஸ்!



''கொளுத்தர வெயிலிலே தலையில் ஒண்ணுமில்லாமல் மூணு மணி நேரம் சுற்றிட்டு வர்றேன்..''

''தலையில் 'ஏதாவது' இருந்தால் இப்படி சுற்றியிருக்க மாட்டேத்தான்!''

- எம்.ஏ.நிவேதா,
அரவக்குறிச்சிப்பட்டி.




''கணக்கைப் பொறுத்த வரைக்கும் எனக்கு அது தாண்டா ஆசியா...''

''என்னடா சொல்றே?''

''மிகப் பெரிய கண்டம்னு சொன்னேன்!''


- சீர்காழி வி.ரேவதி



''மேல வீசி எறியற பொருள் ஏன் மீண்டும் பூமிக்கே வருது?''

''பூமி மேல இருக்கற பாசத்தால்தான் இருக்கணும், ஸார்!''

- வீ. வீரப்பன், சேலம்



''அதோ போறாரே ஒருத்தர், அவர் அடிமட்டத்திலிருந்து இப்போ மேல் மட்டத்திற்கு உயர்ந்திருக்கிறார்.''

''எப்படி சொல்றீங்க?''

''முன்பு 'செருப்பு' விற்றுக் கொண்டிருந்தார். இப்போ 'தொப்பி' விற்கிறாரே!''

- எஸ். அமீர்ஜான்,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
நல்லூர்.

ரா. சுந்தரமூர்த்தி

10

ஜனாதிபதி விருது!



சின்னமனூர் சின்னப்பட்டாளம்

எதிர்த் திசையில் இருந்து வந்து கொண்டிருந்த போலீஸ் ஜீப்பைக் கண்டதும் வேனில் இருந்த சிலர் வண்டியில் இருந்து குதித்து ஓடத் தொடங்கினர்.

சடாரென ஜீப்பில் இருந்து இறங்கிய கனகசபை தனது ரிவால்வரை எடுத்து, ஓடிய ஒருவனின் முழங்காலுக்குக் கீழே சுட்டார்.

அவன் ''ஐயோ, அம்மா'' என்று அலறியபடியே தடுமாறி விழுந்தான். மற்றவர்கள் ஓடி மறைந்தனர்.

இதைத் தூரத்தில் இருந்தே காரில் வந்து கொண்டிருந்த பண்ணையார் கண்டுகொண்டார். அவரது உடல் ஒரு கணம் நடுங்கி ஓய்ந்தது. அவசரமாகப் பக்கத்துச் சந்தில் நுழைந்து வண்டியை வேகமாக ஓட்டுமாறு டிரைவருக்குக் கட்டளையிட்டார். பயத்தில் அவரது நாக்குக் குழறியது.

சூழ்நிலையின் தீவிரத்தைப் புரிந்துகொண்ட டிரைவர், பரபரப்பாக வண்டியை அருகிலிருந்த சந்துக்குள் நுழைத்து படுவேகமாக ஓட்டிக் கொண்டு போனான். கார் நெடுந்தூரம் வந்து விட்டதை உணர்ந்து தெளிவான அவர், பின்னால் ஏதேனும் போலீஸ் ஜீப் தொடர்கிறதா என்று திரும்பித் திரும்பி பார்த்தபடியே பேசினார். ''டிரைவர், வண்டியை ஆள் ஆரவமற்ற ஓரிடத்தில் நிறுத்து'' என்றார்.

ஓரமாக வண்டியை நிறுத்தினான் டிரைவர்.

''இப்போ என்னய்யா செய்யணும்?'' என்றான்.

''வண்டியின் டயரை பஞ்சர் செய்ய வேண்டும். ஏதாவது வழி இருக்கிறதா?'' என்றார்.

டிரைவர் தனது சீட்டுக்கு அடியில் கிடந்த பாட்டிலை எடுத்தான். தரையில் அடித்து அதை உடைத்தான். அதன் உடைந்த கூர் முனையை டயரின் மீது பலங் கொண்ட மட்டும் ஓங்கிக் குத்தினான்.

'சர்க்'கென்று அது டயரில் புகுந்தது. காற்று வெளியேற, கார் ஒரு

பக்கமாய் உட்கார்ந்தது.

பின்பு இருவரும் கடையை நோக்கி நடந்தனர். மூச்சிரைக்க வேகமாக வந்தடைந்த அவர்கள், "தொலைபேசி இருக்கிறதா?" என்றனர்.

பையில் கைவிட்டுத் துழாவி சிறிய டிஜிட்டல் டைரியை எடுத்தார் பண்ணையார்.

நகரின் முக்கிய கார் கேரேஜ் எண்ணைத் தேடிக் கண்டுபிடித்து எண்களை அழுத்தினார்.

போன் உயிர் பெற்றதும், கார் வழியில் பஞ்சராகிவிட்டது. உடனே ஒரு வாடகைக் காரும், மெக்கானிக்கையும் அனுப்புமாறு கோரினார்.

அடுத்த பத்து நிமிடத்தில் வாடகைக் கார் வந்தது. மெக்கானிக் பின்னால் வருவதாக அவன் கூறினான்.

அதில் ஏறிக் கொண்ட பண்ணையார், புறநகர் கிராமம் ஒன்றின் பெயரைக் கூறி அங்கே செல்லுமாறு தெரிவித்தார்.

கார் அவர் கூறிய தச்ச நல்லூர் கிராமத்தை நோக்கி விரைந்தது.

குண்டடி பட்டவனைக் காவலர்கள் வந்து பிடித்து தூக்கினார்கள். அவன் அடிபட்ட அதிர்ச்சியில் மூர்ச்சையாகி இருந்தான். ஏற்கெனவே தந்திருந்த தகவலின்படி ஆம்புலன்ஸ் விரைந்து வந்து சேர்ந்தது. அவனை அதில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றனர்.

வலி மறக்க ஊசி போட்டுத் தோட்டாவை எடுத்து விட்டு, கட்டுப் போட்டிருந்தனர்.

கனகசபை மருத்துவமனைக்குள் குண்டடி பட்டவன் இருக்கும் வார்டை நோக்கி நடந்தார்.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்திருந்த அவனிடம் போலீஸ்காரர்கள் "உன் பெயர் என்ன? ஊரென்ன?" என்று விசாரித்துக்




கொண்டிருந்தனர். கனகசபை அறைக்குள் நுழைந்ததும் போலீஸ்காரர்கள் சல்யூட் அடித்துவிட்டு விலகி நின்றனர்.

அதற்குள் டாக்டர் ஒருவர் அறைக்குள் நுழைந்தார். போலீஸ்காரர்களைச் சற்று விலகி இருக்கும்படி கூறினார். பின்பு அவனைப் பரிசோதித்தார்.

கனகசபை கேட்டார்: "இப்ப எப்படி இருக்கான்?"

டாக்டர் ''நல்ல முன்னேற்றம் இருக்கு. கால் புண் ஆறிவிட்டால் போதும். வேறு ஒரு பிரச்னையுமில்லை'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

டாக்டர் போனதும் கனகசபை அவன்ன நெருங்



கிப் போய் பெட்டின் மீது உட்கார்ந்தார்.

"உன் பெயர் என்ன?" என்றார் கனகசபை.

"பால்பாண்டி" என்று மெதுவாகச் சொன்னான் அவன்.

"இதோ பாரு பாண்டி. நீ செய்யற வேலை தப்பானது. எனக்குத் தெரியும் நீ வெறும் கூலிக்காரன்தான். உனக்கு மேல இருக்கறவங்க சொல்றதைச் செய்யற. சாதாரண வேன் டிரைவர் நீ. உன் குற்றத்தை ஒப்புக் கொண்டு அப்ரூவர் ஆயிட்டா தண்டனை குறையும். பிறகு ஒழுக்கமாக வாழவும் செய்யலாம். தப்பு செய்யறது சகஜம். திருந்தி வாழ்வது நல்லது. புரிஞ்சுதா?" என்று இதமாகப் பேசினார்.

அவன் "எனக்கு ஒண்ணும் தெரியாது சார். என்னை விட்டுவிடுங்க. நான் பிள்ளைக் குட்டிக்காரன்" என்றான்.

"என்ன தெரியாது உனக்கு? நீ ஓட்டி வந்த வேன் இப்போ போலீஸ் ஸ்டேஷனில். அதில் ஆர்.டி.எக்ஸ், டெட்டனேட்டர், ஜில்லட்டின் போன்ற பயங்கரமான பொருட்கள் இருந்தன. அதோடு ஏகப்பட்ட வெடிமருந்துகள் எல்லாம் சட்ட விரோதமாகக் கடத்த முயற்சி செய்து இருக்கே. இதை நீ மட்டும் தனி ஆளா செய்ய முடியாது. பெரிய கூட்டமே இதில் சம்பந்தப்பட்டிருக்கு. அது உனக்குத் தெரியும். உண்மையைச் சொன்னாத்தான் நீ தப்பிக்க முடியும், இல்லே தொலைஞ்சே. ஆமா, நீ செய்திருக்கிற தப்புக்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா? நீ ஆயுள் முழுக்க ஜெயிலில் களி திங்க வேண்டி வரும். உன் புள்ளைக்குட்டிங்க சாப்பாட்டுக்கு இல்லாம தெருவில் நிற்கும். நீ யாருக்காகச் சம்பாதிக்கிற? அவங்ககூட சந்தோஷமாக வாழ வேண்டாமா?" என்றார்.

திடீரென அவன் அவரது கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு "ஐயா நீங்கதான் எப்படியாவது என்னைக் காப்பாத்தணும். காசு, பணத்துக்கு, ஆசைப்பட்டு அவங்ககிட்ட வேலைக்குப் போனதைத் தவிர நான் ஒரு தப்பும் செய்யலை" என்று கதறினான். அவன் கண்களில் கண்ணீர் பொல பொலவென்று உதிர்ந்தது. உடல் குலுங்க முகத்தை மூடிக் கொண்டு அழுதான்.

கனகசபை அவன் தோள்களில் தட்டிக் கொடுத்தார். "பாண்டி, பயப்படாதே. நான் பார்த்துக்கறேன். ஆனா நீ நான் சொல்வதைக் கேட்டு ஒத்துழைக்கணும் அவ்வளவுதான்."

அவன் "சரிங்கய்யா, நீங்க சொல்றதைக் கேட்டு நடந்துக்கிறேன்" என்றான்.

"வெரிகுட். அதுதான் நல்லது. உனக்கு மட்டுமல்ல. நாட்டுக்கே நல்லது" என்று கூறிவிட்டு எழுந்தார் அவர்.



காவலர்களைப் பார்த்து, "ஜாக்கிரதையா பார்த்துக்குங்க. அவனை யார் பார்க்க வந்தாலும் எனக்குத் தகவல் தரணும். டாக்டர்கள் வந்தாலும் ஆஸ்பத்திரியில் வேலை செய்யற யார் வந்தாலும் அவர் டாக்டர்தானா, ஆஸ்பத்திரி ஊழியர்தானா என்று பெரிய டாக்டரிடம் கேட்டுவிட்டுத்தான் அனுமதிக்கணும், புரிஞ்சுதா?" என்றார்.

போலீஸார், "சரி சார். நாங்க பார்த்துக்கறோம்" என்றனர்.

மருத்துவமனையை விட்டுத் தனது

ஜீப்பை நோக்கி நடந்தார் கனகசபை. எதிரில் மோட்டார்பைக்கில் வந்து இறங்கினார் சப்-இன்ஸ்பெக்டர் கணேஷ்.

வணக்கம் தெரிவித்தார் அவர். ''சொல்லுங்க கணேஷ், என்ன விஷயம்?'' என்றார் கனகசபை.

''நான் பண்ணையாரை ஃபாலோ பண்ணி போயிட்டு வர்ரேன். அவர் கூலாக தச்சநல்லூர் போய் ஒரு கரகாட்டக் குழுவையும், சிலம்பாட்டக் குழுவையும் புக் பண்ணிட்டு சின்னமனூர் திரும்பி அவர் வீட்டுக்குப் போயிட்டார்''

''அப்படியா! அந்த ஆட்டக்காரங்களைத் தெரியுமா?''

''தெரியும் சார். குழுவோட தலைவர்கள் இரண்டு பேரை ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டு வந்திருக்கேன். அவங்க இப்ப அங்கத்தான் இருக்காங்க.''

''வெரிகுட். நல்ல காரியம் பண்ணினீங்க. வாங்க ஸ்டேஷனுக்குப் போவோம்.''



இருவரும் ஸ்டேஷன் போய் சேர்ந்தனர். ஆட்டக்குழு தலைவர்கள் பயந்தபடி சோகத்துடன் நின்று இருந்தனர். அவர்களைப் பார்த்து கனகசபை புன்னகை செய்தார். ''என்னமோ ஏதோன்னு நினைக்காதீங்க. உங்களால் எங்களுக்கு ஒரு உதவி ஆகணும். அதுக்குத்தான் அழைச்சிட்டு வந்திருக்கோம்'' என்றார்.

ஆயாசப் பெருமூச்சு விட்ட அவர்கள் ''அப்படியா! உண்மையில் நாங்க பயந்துகிட்டுதான் இருந்தோம்'' என்றனர், முகத்தில் மகிழ்ச்சி பொங்க இயல்புக்கு வந்தவர்களாய்.

கனகசபை அவர்களைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று ஒரு ரகசியத் திட்டத்தை விவரித்தார்.

கிட்டான் உள்பட நால்வரும் ஒரு குளக்கரையில் உட்கார்ந்திருந்தனர். கிட்டானிடம் முத்துக்குமார் ''அடுத்து என்னடா செய்யறது? ரொம்ப போர் அடிக்குது'' என்றான்.

''எப்படியும் கனகசபை சாரிடமிருந்து தகவல் வரும். அப்புறம்தான் அடுத்த வேலை'' என்றான் கிட்டான்.

குளத்தின் எதிர்கரையில் நின்றிருந்த ஒருவர், அவர்களைப் பார்த்து அருகில் வரும்படி சைகை செய்தார். ''யார்டா அது?'' என்றான் செந்தில். ''தெரியலையே'' என்றபடி எழுந்தான். நால்வரும் அவரிடம் சென்றனர்.

சுற்றும் முற்றும் பார்த்தார் அவர். பின்பு, ''நான் கனகசபை அனுப்பிய ஆள். பெயர் ராமகிருஷ்ணன்'' என்றார்.

''நாங்க எப்படி நம்பறது?'' என்றான் உதாரணம். அவர் தனது அடையாள அட்டையை எடுத்துக் காட்டிவிட்டு ''நீங்க பலே ஆளுங்கதான் தம்பிகளா!'' என்றார் பாராட்டும் விதமாக.

''சரி, என்ன செய்தி?'' என்றான் கிட்டான். அவர் பண்ணையார் வேன் மாட்டியது முதல், கரகாட்டக் குழுவிடம் நடந்த திட்டம் வரை சுருக்கமாகக் கூறினார். அத் திட்டத்தில் அவர்களுக்கான பங்கைப் பற்றியும் விவரித்தார். ''எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள்'' என்றபடி நடையைக் கட்டினார்.

நால்வரும் ஒருவர் முகத்தை ஒருவர் ஆச்சரியமாகப் பார்த்தபடி ''வேலை வந்தாச்சு'' என்று கோரஸாகக் குரல் எழுப்பினர்.

அய்யனார் கோயில் திரு

விழா. ஊரே களை கட்டி இருந்தது. சிட்டழகு குடும்பத்தினர் மட்டும் இன்னும் அவன் கிடைக்காத சோகத்தில் இருந்தனர்.

கரகாட்டக் குழு ஒரு வேனில் வந்திறங்கியது. கூடவே ஒரு புதிய வேனும் வந்ததைக் கண்டு அதிர்ந்தார் பண்ணையார்.

''கரகாட்டக் குழுத் தலைவரை அழைத்து ''என்னப்பா கூட வேன்? அதில் யார் வந்திருக்கா?'' என்றார்.

''அய்யா, அவங்க எல்லாம் வெளிநாட்டுப் பயணிகள். தென்னாப்பிரிக்காவில் இருந்து வந்திருக்காங்க. நம் ஊர் கிராமிய ஆட்டம், திருவிழா எல்லாம் பார்க்கணும்னு வந்திருக்காங்க'' என்றார்.

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த வேனில் இருந்து ஆப்பிரிக்க கறுப்பினத்தவர்கள் போல் வேடமணிந்த கனகசபை உள்பட, பல சி.ஐ.டி அதிகாரிகள் இறங்கினர்.

அது தெரியாத பண்ணையார் அவர்களை ''வாங்க, வாங்க. நீங்க வந்ததில் எங்கள் கிராமம் மகிழ்ச்சி அடைகிறது'' என்றார்.

''அவர் என்ன சொல்றார்'' என்று தமிழ் தெரியாதவர் போல் ஆங்கிலத்தில் கேட்டார் ஒரு ஆப்பிரிக்கர். பண்ணையார் சொன்னதை மொழி பெயர்த்தார் ஒருவர்.

ஆப்பிரிக்கர்கள் வந்துள்ள செய்தி ஊருக்குள் பரவ, ஒரு கூட்டமே கூடிவிட்டது. பண்ணையார் வீட்டுக்கருகில் அந்த நான்கு பேரும் இருந்தனர்.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு முன்னே வந்த கிட்டான், ஆப்பிரிக்கர்களைப் பார்த்து விளையாட்டாக ''ஹவ் ஆர் யூ?'' என்றான்.

''பைன். யூ நோ இங்கிலீஷ்?'' என்றார் ஒரு ஆப்பிரிக்கர்.

'யா' என்றான் கிட்டான். சற்று நேரம் இருவரும் ஜாலியாக ஆங்கிலத்தில் உரையாடினர்.

அதைக் கண்டு பண்ணையாருக்கு வெறுப்பாக இருந்தது. என்றாலும் வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

ஆப்பிரிக்கர்களில் ஒருவன் மட்டும் பேண்ட் அணிந்து, நொண்டி நடந்து வந்தான். அவனுக்குப் போடப்பட்டிருந்த ஆப்பிரிக்கன் வேடம் மிகப் பொருத்தமாய் இருந்தது. அவன்தான் பால்பாண்டி. அவனை யாரும், குறிப்பாக பண்ணையாரும் அடையாளம் கண்டு கொள்ளாததால் அவன் மகிழ்ச்சியாய் இருந்தான்.

ஒரு ஆப்பிரிக்கர் கிட்டான் நண்பர்களிடம் ''நீங்க எங்களுக்கு உங்க கிராமத்தைச் சுற்றி காண்பிக்கணுமே?'' என்றார் ஆங்கிலத்தில்.

''ஓ, தாராளமாக'' என்று பதில் அளித்தனர் நால்வரும். அவர்களுக்குத்தான் தெரியுமே ஆப்பிரிக்கர்கள் யார் என்று.

பண்ணையார் குறுக்கிட்டு ''இப்போ ஓய்வு எடுத்துக்குங்க. இரவு திருவிழா இருக்கு. நாளைக்குச் சுற்றிப் பார்க்கலாம்'' என்றார்.

- *1904-ம் ஆண்டுதான் மாடர்ன் ஒலிம்பிக்கில் குத்துச் சண்டையும் ஒரு போட்டியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.*
- *முதன்முறையாக இந்தியா ஒலிம்பிக் குத்துச்சண்டையில் கலந்து கொண்டது 1948- ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில்தான்.*

அதுவும் சரிதான் என்று பண்ணையார் வீட்டில் எல்லோரும் ஓய்வு எடுக்கச் சென்றனர். எல்லோரையும் தங்க வைத்துவிட்டு, கோயில் வேலைகளைக் கவனிக்கப் புறப்பட்டார் பண்ணையார்.

கரகாட்டக் குழு ஓய்வு எடுத்தது. ஆனால் ஆப்பிரிக்கக் குழு வீட்டை ரகசியமாக ஆய்வு நடத்தியது. டிரான்ஸ்மிட்டர்கள் உள்பட நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், வயர்லெஸ் ஆகியன இருந்தன. சத்தமில்லாமல் அவற்றின் தொடர்புகளை கட் செய்து, அதன் இயக்கத்தைத் தடை செய்தனர்.

இரவு அய்யனார் கோயிலின் திடல்களை கட்டியது. கிராம மொத்தமும் அங்கே திரண்டிருந்ததால் தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. கோயிலில் வாணவேடிக்கை, ஆட்டம் பாட்டம் என அமர்க்களப்பட்டது.

ஆட்டம் உச்சகட்டத்தில் இருந்தபோது பண்ணையாரிடம் ஒரு சீட்டு கொடுக்கப்பட்டது.


அதில் பால்பாண்டி போலீசிடமிருந்து

தப்பி விட்டதாகவும், ஊர்க் கோடியில் உள்ள ஒரு மண்டபத்தில் காத்திருப்பதாகவும் எழுதியிருந்தது.

அதைப் படித்ததும் அவர் பரபரப்பாக எழுந்து கூட்டத்தை விட்டு வெளியே வந்து, காரில் ஏறி அந்தச் சீட்டு சொன்ன இடத்துக்கு விரைந்தார்.

நால்வரும் கூட்டத்தை விட்டு நைசாக நழுவி, பண்ணையார் அந்த இடத்துக்குச் செல்லும் முன் சென்றனர். பண்ணையார் சீட்டு குறிப்பிட்ட மண்டபத்துக்குள் நுழைந்து "பாண்டி... பாண்டி" என்று அழைத்தார். அதற்காகவே காத்திருந்த நால்வரும் அவரை உள்ளே வைத்து அறையின் கதவை இழுத்துச் சாத்தி, பூட்டினர்.

அவர் உள்ளே இருந்து என்ன கத்தினாரோ தெரியவில்லை. கதவும் சுவரும் பழைய காலத்தவை என்பதால் உறுதியாகவே இருந்



தன. அவரது சத்தம் வெளியே கேட்கவேயில்லை.

நான்கு பேரும் மீண்டும் கோயில் அருகில் வந்தபோது, ஆப்பிரிக்கர்கள் இவர்களை எதிர்பார்த்து இருந்ததால் உடனே அவர்கள் எழுந்து வெளியே வந்தனர்.

கனகசபை ஆட்டக்குழுத் தலைவரிடம் "நீங்க தொடருங்க. நாங்க வர்றோம்" என்று ஜாடையாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

பண்ணையார் எங்கே போனார், எப்போ வருவார் எனத் தெரியாத அவரது ஆட்கள், திருவிழா கூத்தில் மூழ்கி இருந்தனர்.

பாண்டி வழி காட்ட ஆப்பிரிக்கக் குழு, கிராமத்தில் பண்ணையாரின் இரகசிய குடோன்கள், வீடுகள், நிலவறைகள் என எல்லா இடங்களிலும் சோதனை போட்டது. அங்கு கண்ட ஆயுதங்கள், வெடி மருந்துகள் அவர்களை ஆச்சரியப்பட வைத்தன.

ஒரு நிலவறையில் இருந்து சிட்டழகு மீட்கப்பட்டாள். காவலுக்கு இருந்தவர்கள் துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டனர். வயர்லெஸ் மூலம் காவல்துறைக்குத் தகவல் அனுப்பப்பட்டுப் பண்ணையார் சட்ட விரோதமாகப் பதுக்கி வைத்திருந்த ஆயுதங்கள், வெடிமருந்துகள் எல்லாவற்றையும் கைப்பற்றினர். கைது ஆனவர்களையும் ஏற்றிச் சென்றனர்.

நண்பர்கள் நால்வரைக் கண்ட சிட்டழகு கவலையை மறந்து கைகுலுக்கிச் சிரித்தாள்.

"உனக்குத்தான் ரொம்ப சிரமம்" என்றனர் நால்வரும்.

"அதெல்லாம் இல்லை. நீங்க இருக்கும்போது எப்படியும் என்னைக் காப்பாத்திடுவீங்கன்னு தெரியும். அதனால் கவலையில்லாமல்தான் இருந்தேன்" என்றாள்.

வெடி மருந்துக் கிடங்குகளைச் சோதனையிட்டு விட்டுத் திரும்பும்போது, கள்ளச்சாராய அடுப்புகளை உடைத்து எறிந்து, அங்கு வைக்கப்பட்டிருந்த சாராயத்தைக் கவிழ்த்து விட்டனர்.

இரவோடு இரவாகப் பண்ணையாரும் கைது செய்யப்பட்டார். அவரது மேலிடத் தொடர்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

காலையில் திருவிழா கொண்டாட்ட அசதியில் இருந்து விழித்து எழுந்த மக்களுக்குச் செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி என, தங்கள் கிராமம் பரபரப்பாகப் பேசப்படுவதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். 'அடப்பாவி, நம்ம பண்ணையாரா இப்படி?' என திகைத்தனர். ஆனால் செய்தி நிஜத்தை உறுதிப்படுத்தியது.

ஆயுத, வெடி பொருட்கள் பதுக்கலைக் கண்டுபிடிக்க உதவிய சிறுவர்களுக்கு வீரதீரச் செயலுக்கான ஜனாதிபதி விருது சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக ஒரு செய்தி வந்து சேர்ந்தது. ஊர் மக்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்தது.

(முற்றும்)




• பிகாஸோ

பணி

விஸ்வேஸ்வரய்யா மைசூர் திவானாகப் பணிபுரிந்து வந்தார். ஒரு மாவட்டத்திற்குச் சுற்றுப் பயணம் சென்றிருந்தபோது, அந்த மாவட்ட ஆணையர், "ஐயா! நீங்கள் செக்ரடேரியட்டில் பணியாற்றும் போது நான் தங்களுக்குக் கீழ் வேலை செய்தவன்" என்று சொன்னார். உடனே, "ஆம். எனக்கு நன்கு நினைவு இருக்கிறது. ஆனால் தாங்கள் என் கீழ் பணி யாற்றவில்லை. என்னுடன் பணி செய்தீர்கள்" என்றார் விஸ்வேஸ்வரய்யா.

— எஸ். ராஜம்



• விஸ்வேஸ்வரய்யா



• பெரியார்

பாடம் கற்ற ஆசிரியர்!

கற்ற பாடம்

கோபால கிருஷ்ண கோகலே பள்ளி ஆசிரியராக இருந்த காலகட்டம். ஒரு நாள் கப்பலைப் பற்றிய பாடத்தை மாணவர்களுக்கு நடத்த வேண்டி இருந்தது. அந்தப் பாடத்தில் கப்பலைப் பற்றி எழுதியிருந்த சில விபரங்கள் அவருக்குப் புரியவில்லை. இந்தக் கப்பல் பாடத்தை பிறகு படிக்கலாம், என்று ஒத்தி வைத்து விட்டு அன்று வேறு பாடம் நடத்தினார். மறுநாளே அருகில் இருந்த கப்பல் துறைமுகத்திற்குச் சென்று, ஒரு கப்பலில் ஏறி, அதன் கேப்டன் மூலமாக கப்பலைப் பற்றிய பல விவரங்களை நேரில் கண்டு, கேட்டுத் தெளிந்தார் கோகலே. அடுத்த வகுப்பில் முதல் நாள் விட்ட கப்பல் பாடத்தை எடுத்துக் கொண்டு, மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில், விளக்கமாகப் பாடம் நடத்தினார் கோகலே!

— ஆர்.ஆர். பூபதி,
திண்டுக்கல்.

சாறு ஊற்று

பண்டிதமணி கதிரேசன் அவர்கள் மறைமலை அடிகளார் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றிருந்தார். அப்போது மறைமலை அடிகளார், மனைவி நீலாம்பிகையிடம் சிறிது ரசம் ஊற்றுமாறு கூறினார். நீலாம்பிகையோ "ரசம் என்பது வடமொழிச் சொல், சாறு என்று தூய தமிழில் சொல்லுங்களேன்" என்றார். பண்டிதமணி சிரித்துக் கொண்டு, "கருப்பாயி சிறிது சாறு ஊற்று" என்றார். அதற்கு நீலாம்பிகை, "என் பெயரை கருப்பாயி என்று மாற்றிவிட்டீர்களே" என்று கேட்டார். பண்டித மணியோ "அம்மா நீலம் என்றால் தமிழில் கருப்பு என்று பொருள், அம்பிகை என்றால் ஆயி என்று பொருள். இரண்டையும் சேர்த்து கருப்பாயி என்றேன்" என்றார். நீலாம்பிகை வாயடைத்துப் போனார்.

— ர. யாழினி, மேலச்சித்தை.

வழிகாட்டும் நட்சத்திரங்கள்...

வடை

பெரியார் ஒருமுறை மதுரை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். பெரியார் சென்று கொண்டிருந்த கார் திண்டுக்கல் அருகே சென்று கொண்டிருந்தது. திடீரென்று டிரைவரை காரை நிறுத்தும்படி சொன்னார். கார் நின்றதும், காரில் வந்த தொண்டர் ஒருவரிடம், சாலை ஓரத்தில் பெண் ஒருத்தி வடை சுட்டுக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, வடை வாங்கி வருமாறு சொன்னார். வடை வாங்கி வந்ததும் அதை அவர் ருசித்துச் சாப்பிட்டதுடன் உடனிருந்தவர்களுக்கும் கொடுத்தார்.

உடன் வந்த தொண்டர் ஒருவர், "ஐயா! தாங்கள் வடை சாப்பிட வேண்டும் என்று சொல்லி இருந்தால், ஒரு நல்ல ஹோட்டலாகப் பார்த்துச் சாப்பிட்டு இருக்கலாமே" என்று பெரியாரிடம் கேட்டார். அதற்குப் பெரியார், "சாப்பிடலாம்தான்... ஆனால் இதுபோல் விலை மலிவாக, ருசியான வடை கிடைக்காது. அத்துடன் நம்மால் ஒரு ஏழைப் பெண்ணும் பயனடைகிறார் அல்லவா!" என்றார்.

— என். ஜரீனா பானு,
திருபட்டினம்

யார் செய்தது?

ஓவியர் பிகாஸோ, உலகப் போரில் சர்வாதிகாரி ஹிட்லர் செய்த அட்டூழியங்களை ஓவியமாக வரைந்து கண்காட்சி வைத்திருந்தார்.

ஹிட்லர் இதைப் பார்த்து மிகவும் ஆத்திரமடைந்தார். உடனே பிகாஸோவை அழைத்து "இதெல்லாம் நீ செய்ததா?" என்று கோபத்துடன் கேட்டார்.

உடனே பிகாஸோ அமைதியாக, "இல்லை. இதெல்லாம் தாங்கள் செய்தவைதான். இதெல்லாம் தங்கள் கைவண்ணமே, என்னை ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள்!" என்றார். ஹிட்லருக்குத் தன் தவறு புரிந்தது.

— ஜி. பிரணவ்,
கரூர்

• சி.வி. ராமன்



• கதிரேசன்



கறுப்பா, சிவப்பா?

சர்.சி.வி. ராமன், முதலில் ரங்கூனில் கணக்கு அதிகாரியாக பதவி வகித்து வந்தார். அவரது மேலதிகாரி ஓர் ஆங்கிலேயர். ஒரு நாள் அந்த அதிகாரி ராமனைத் தன் அறைக்கு அழைத்து, "இந்தக் கறுப்பு மையை நான் சிகப்பு மை என்று கூறினால் அதற்கு நீ 'ஆமாம் சார்!' என்று சொல்ல வேண்டும்" என்று அதட்டியபடி கூறினார். அதற்கு ராமன், "அப்படி ஒரு பொருத்தமில்லாத கேள்வியை நீங்கள் கேட்டால், "நீங்கள் குருடரா அல்லது பைத்தியமா அல்லது இரண்டுமா? என்று நான் கேட்க வேண்டிய கடமை எனக்கு உண்டு" என்று பதிலளித்தார். அதிகாரி தன் செயலுக்கு வருந்தினார்.

— நெ. இராமன்,
சென்னை - 74.


• கோகலே




7. மாலா தேடிய மாயப் பெண்


கதை: விஜி
படம்: சேகர்





மந்திரகலா பெரிய உருவமாக மாறி, மாலாவைப் பிடித்து, தூக்கி வீசினாள்.
மாலா நீண்ட தொலைவுக்கு அப்பால் போய் விழுந்து, மயக்கமானாள்.
மாலா மறுநாள் கண் விழித்தாள். அருகில் ஒரு பாட்டி இருந்தாள்.
பாட்டி, நீங்கள் எப்படி இங்கு?
நான் மந்திரகலாவின் பாட்டி. அவள் எங்களிடமிருந்து சக்தியைப் பறித்துக் கொண்டு தீய செயல்கள் செய்து வருகிறாள். அவளை யாராவது அழித்தால்தான் நிம்மதி.
மாலா எல்லா விஷயத்தையும் சொன்னாள்.
மந்திரகலாவின் உயிர் ஒரு பனை மரத்தில் உள்ள எலியிடமும், குளத்திலிருக்கும் பொன் நிற மீனிடமும் உள்ளது. இவை இரண்டையும் அழித்தால் அவளைச் சுலபத்தில் வென்று விடலாம்.
எலியையும் மீனையும் எப்படி கண்டுபிடிப்பது?


உன்னைக் காப்பாற்ற என்னை இங்கு அழைத்து வந்ததே அந்தக் கழுகுதான். அது எலியை அழிக்க உதவும்.
ம்... எனக்கு முதலை நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனை வைத்து மீனையும் பிடித்து விடலாம்.
மாலா பாட்டியிடம் சக்திவாய்ந்த ஈட்டியைப் பெற்றுக் கொண்டாள்.
மாலாவைக் கழுகு தன் கால்களில் பிடித்துக் கொண்டு பறந்தது.
மாலா, பனை மரங்கள் உள்ள பகுதிக்கு வந்து விட்டோம். கீழே சென்று விசாரிக்கலாம்.
அப்படியே செய்.
கீழே இறங்கினர்.
கிளியே, இங்கு ஒரு பனை மரத்தில் எலி இருக்கிறது. அது எந்தப் பனை மரம்?
இங்கு நூறு பனைமரம் இருக்கிறது. ஐம்பதாவது பனை மரத்தில் தான் எலி வசிக்கிறது.



மாலாவைத் தூக்கிக் கொண்டு மீண்டும் கழுகு பறந்தது.
மாலா, கவனமாக மரத்தை எண்ணிக் கொண்டு வா.
கவனமாகத்தான் எண்ணறேன்.
இது ஐம்பதாவது மரம்.
மாலா, நான் பக்கத்து மரத்திலிருந்து கவனிக்கிறேன். நீ கீழே இருந்து கவனி.
மாலை வரை எலி வரவில்லை. நிலா வெளிச்சம் பகல் போல் காட்டியது.
மாலா, எலி உணவுக்காக வெளியே வரும். தயாராக இரு.
நான் தயார்.
எலி பொந்திலிருந்து வெளியே எட்டிப் பார்த்தது.

(தொடரும்)

1000/- ரூபாய் பரிசுப் போட்டி



பள்ளி மாணவ, மாணவியருக்காக இந்தப் போட்டி ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகிறது. நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ. 1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- பரிசாக வழங்கப்படும்.

உங்கள் படிப்புக்குத் தேவையான பொருட்களை இதில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி **20.1. 2003.**

இந்த மாதப் போட்டி

பொருத்துக :

1. ஆர்க்கிமிடீஸ்	-	தினார்
2. தார் பாலைவனம்	-	புத்தமதம்
3. பஹ்ரைன்	-	ஸ்டாக்ஹோம்
4. தலாய்லாமா	-	இராஜஸ்தான்
5. ஸ்வீடன்	-	யுரேகா
6. பைப்பர் நைக்ரம்	-	மிளகு

7. கொண்டை வைத்திருப்பாள்; பெண்மணியும் அல்ல; குப்பையெல்லாம் கிளறிடுவாள்; கிறுக்கும் அல்ல - அது என்ன?

8. மேலே உள்ள படத்தில் இருப்பது என்ன?

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், செ... 7.



அரு.வி.சிவபாரதி



கை கொடுக்கும் கை

பாடம் நடத்தத் தொடங்குவதற்கு முன் பாலுவைத் தன் அருகே கூப்பிட்டார் ஆசிரியர் பொன்ராசன்.

"என்ன பாலு? புத்தகமெல்லாம் வாங்கியாச்சா?" - ஆசிரியர் கேட்டார்.

"இல்லைங்க சார். ரெண்டொரு நாள்ல வாங்கித் தர்றேன்னு அப்பா சொல்லியிருக்காங்க" அமைதியாய் சொன்னான் பாலு.

இந்த வருடம் பள்ளி ஆரம்பித்து இருபது நாட்களுக்கும் மேலாகிவிட்டது. எல்லா ஆசிரியர்களும் ஐந்து பாடங்களுக்கு மேல் நடத்தி விட்டனர். ஆனால் பாலு இன்னமும் ஒரு புத்தகம் கூட வாங்கவில்லை. பாலுவின் குடும்ப வறுமையை பொன்ராசனும் அறிவார். அதனால் அவனுக்கு வேண்டிய நோட்டுகள் அனைத்தையும் ஆசிரியரே வாங்கிக் கொடுத்திருந்தார். புத்தகங்களையாவது அவன் வீட்டில் எப்படியும் வாங்கிக்கொடுத்து விடுவார்கள் என்று நம்பினார்.

"சரி பாலு. சென்ற வருடம் எட்டாம் வகுப்பு படித்த மாணவன் ஒருவனிடம் அவனின் பழைய புத்தகங்களைக் கேட்டிருக்கிறேன். அவனும் பாதி விலைக்குத் தர்றதா சொல்லியிருக்கான். நான் உனக்கு வாங்கித் தர்றேன். இப்ப போய் உட்கார்..."

அவர் சொல்லவும் பாலுவின் கண்கள் கலங்கின.

"ரொம்பவும் நன்றிங்க சார்!" சொன்னவன் தன் இருக்கைக்குத் திரும்பினான்.

சிவாவையே பார்த்தபடி இருந்தான் மாறன். இருவரும் பாலுவின் அருகேயே அமர்ந்திருப்பவர்கள். மாறன் பார்வையின் அர்த்தம் சிவாவுக்கும் புரிந்தது. குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்து கொண்டான்.

மதிய உணவு இடைவேளையில் சிவாவின் அருகில் வந்து அமர்ந்தான் மாறன். மற்ற மாணவர்கள் யாரும் அருகில் இல்லை.

''சிவா, நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும்'' மாறன் சொல்ல,

''சொல்லுடா...'' என்றான் சிவா.

''சிவா, உங்க அக்கா போன வருஷம் எட்டாம் வகுப்புதானே படிச்சாங்க?''

''ஆமா...''

''உனக்கு உங்க அப்பா இந்த வருஷம் புது புத்தகங்களாவே வாங்கிக் கொடுத்திட்டார். அப்படீன்னா உங்க அக்காவோட போன வருட புத்தகங்கள் இருக்குமே!''

''அது..அது...வந்து... இல்லைடா...''

திணறினான் சிவா. மாறன் விடாமல் கேட்டான் :

''டேய். நீ பேசறதுல இருந்தே தெரியுது! உங்க அக்காவோட புத்தகங்கள் இருக்குன்னு...''

மௌனமாய் இருந்தான் சிவா. மாறன் மீண்டும் பேசினான் :

''சிவா, வீட்டுல சும்மா இருக்கற புத்தகம்தானே. அதைக் கொண்டு வந்து பாலுகிட்ட கொடுத்தா அவன் படிப்புக்காவது உதவுமே!''

''நான் ஏண்டா கொடுக்கணும்?'' சினத்துடன் கேட்டான் சிவா.

''ஏண்டா கோபப்படறே? பாலு ஏழ்மையான குடும்பத்துப் பையன். நல்லா படிக்கறவன் வேற. அவன் குடும்பக் கஷ்டத்துனால அவனோட படிப்பு கெட்டுப் போயிடக் கூடாது. அதனாலதாண்டா சொல்றேன். நம்மால முடியாத உதவியைச் செய்ய வேண்டியது இல்லை. ஆனா இருக்கும் போது கொடுத்து உதவலாமே. அதுவும் பாலு உன் பக்கத்து வீட்டுக்காரன்தானே!''

மாறனின் பேச்சுகளில் சிவாவின் மனம் கரையவில்லை. ''எனக்குக் குடுக்க இஷ்டமில்லைன்னா விட்டுட வேண்டியதுதானே!''

''ஏண்டா இரக்கம் இல்லாமப் பேசற?''

''யார்கிட்டேயும் நான் இரக்கம் காட்டணுமுன்னு தேவையில்லை...'' அப்போது மற்ற மாணவர்களும் அங்கே வர அத்துடன் பேச்சை இருவரும் நிறுத்திக் கொண்டனர்.

சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சிவாவின் மனம் கறுவிக் கொண்டு தானிருந்தது.

'பாலுவாம்! நல்லாப் படிக்கறவனாம்! நான் உதவ வேண்டுமாம். போன வருஷமும் இதே பாலு என்னுடன்தானே படித்தான். ஒருமுறை கூட நான் முதல் ரேங்க் வாங்க முடியவில்லையே! எப்பொழுதும் அவன்தான் முதல் மாணவன். நான் இரண்டாவது ரேங்க். அவன் மட்டும் படிக்க வரவில்லையென்றால் நான்தானே முதல் ரேங்க். அவனுக்குப் போய் நான் உதவ வேண்டுமாம். என் எதிரியே பாலுதானே! இது இந்த மாறனுக்கு விளங்கவேயில்லையே!'

அன்று முழுவதும் இதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந் தான் சிவா.



இப்பொழுதெல்லாம் குத்துச் சண்டைகளின் போது கை உறைகளைப் பயன்படுத்தி குத்துச் சண்டை போடுகிறார்கள். ஆனால் ஆரம்ப காலத்தில் வெறும் கையால் குத்திக் கொண்டு தான் குத்துச் சண்டையிட்டிருக்கின்றனர்.

காலையிலேயே எப்போதும் போல் சிவாவின் வீட்டிற்கு வந்து விட்டான் பாலு. சிவாவின் அப்பா ராமன் அவனை அன்பாய் கூப்பிட்டார்.

"வா பாலு. வந்து உட்கார்."

"சார்! பேப்பர் பார்க்கலாம்னு வந்தேன்" - பாலு சொல்ல,

"தாராளமா படிப்பா." சொன்னவர் தன் கையில் இருந்த தினசரியை அவனிடம் நீட்டினார்.

ஜன்னல் வழியாக இந்தக் காட்சியைப் பார்த்தபடி நின்றான் சிவா. பாலுவை எப்போதும் போல் தன் மனதிற்குள் திட்டிக் கொண்டிருந்தான். சிறிது நேரம் ஆனது. பேப்பர் படித்து முடித்த பாலு, "சார், வார இதழ் எதுவும் வாங்கியிருக்கீங்களா?" என்று கேட்டான்.

தன்னிடம் இருந்த மூன்று வார இதழ்களையும் எடுத்து பாலுவிடம் நீட்டினார் ராமன்.

"இந்தா பாலு. வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போ. படிச்சுட்டு வந்து கொடு."

"ரொம்பவும் தேங்க்ஸ் சார்"_ சொன்ன பாலு எழுந்து நடந்தான்.



இதையெல்லாம் பார்த்தபடி நின்ற சிவாவிடம், அவன் அக்கா செல்வி வந்தாள்.

"என்னடா இங்க நின்னுக்கிட்டு இருக்க?"

"அக்கா, நம்ம அப்பா செய்யறது கொஞ்சம் கூட நல்லாயில்லை. அப்பா வாங்கிட்டு வர்ற புத்தகங்களை, அவர் படிச்சு முடிச்ச பிறகுதானே நாம படிக்கறது வழக்கம். ஆனா அந்தப் பாலு பய வந்தா மட்டும் அப்பா எடுத்து உடனே கொடுத்துடறார். அவர் படிக்கறதுக்கு முன்னாலயே கொடுக்கறாரு..."

பொரிந்து தள்ளினான் சிவா. செல்வி சாதாரணமாய் கேட்டாள் :

"இப்ப அதனால என்னடா நஷ்டம்?"

"என்னக்கா, நீயும் புரியாம பேசற? நம்ம தேவைக்கு வாங்கற பொருள் நமக்குத்தானே முதல்ல பயன்படணும். இது கூட அப்பாவுக்குப் புரியலையே!"

அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே அவனருகே ராமன் வந்து நின்றார். அப்பாவைப் பார்த்ததும் திணறினான் சிவா.

"அப்பா...அது..."

அவனைப் பார்த்து புன்னகைத்தார் ராமன். சிவாவின் தோளில் கை போட்டபடியே பேசினார் :

"சிவா, நீ பேசுவதை நானும் கேட்டேன். பாலு இப்ப புத்தகங்களை

வாங்கிட்டுப் போறான். எல்லாத்தையும் படிச்சு முடிச்சுட்டு சாயந்திரம் நம்மகிட்டேயே கொடுக்கப் போறான். அப்புறம் புத்தகம் நம்மகிட்டதான் இருக்கப் போகுது. நாம எப்ப வேணும்னாலும் படிச்சுக்கலாமே!''

''சரிப்பா! ஆனா நான் அதைச் சொல்ல வரலே. வந்து...'' மீண்டும் தயங்கினான் சிவா. அப்பாதான் பேசினார் :


''சிவா, உலகத்துல எல்லாருக்கும் எல்லாமும் கிடைச்சுடறது இல்ல. படிக்கற காலங்களில் வகுப்புல படிக்கற பாடம் மட்டும் படிப்பு இல்ல. உலக விஷயங்கள் பலவற்றையும் தெரிஞ்சுக் கணுமுன்னா, தினமும் தினசரிகள் படிக்கணும். புத்தகங்கள் படிக்கணும். அப்பத்தான் பொது அறிவு வளரும். பாலு புத்தகம் வாங்கிப் படிக்க முடியாது. அதனால நம்மை நாடி வர்றான். நம்மகிட்ட இருக்கறத கேட்டு வாங்கிக்கிட்டுப் போறான்....''

சொன்ன ராமன் சற்றே இடைவெளி விட்டு மீண்டும் தொடர்ந் தார் : ''சிவா, செல்வம் உடையவன் அதைத் தனித்து அனுபவித் தால்கூட அதை இழந்தவனேன்னு புத்தர் சொல்லியிருக்கார். பாலுவுக்கு நம்ம செல்வத்தை அள்ளிக் கொடுக்கலையே! நாம படிக்க வாங்கற புத்தகங்களை அவனுக்கு இரவலா கொடுக்கறோம். அதன் மூலமா அவனோட அறிவு வளர்ச்சிக்கு நாமும் பயன்பட றோம்ங்கறது மகிழ்ச்சியான விஷயம்தானே! அதுமட்டுமில்ல சிவா. நான் படிக்கற காலங்களில் பாலுவைப் போலவே ஏழைக் குடும் பத்தைச் சேர்ந்தவன்தான். நானும் பொது அறிவு தேடி பல ரோட வீட்டு வாசலுக்குப் போயிருக்கேன். நோட்டுப் புத்தகங்கள் கூட என் பெற்றோரால் வாங்கிக் கொடுக்க முடியாது. நண்பர் களோட இரவல் புத்தகங்களை வாங்கித்தான் படிப்பேன். அப்படி பல நண்பர்கள் பண்ணின உதவியினாலதான் நான் படிச்சு நல்ல நிலைமைக்கு வர முடிஞ்சது. அதனாலதான் நாமும் நாலு பேருக்கு உதவணுமேன்னு ஆசைப் படறேன்.''

அப்பா சொல்லி முடிக்க தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டான் சிவா.

பள்ளிக்குச் செல்லும் போது தன் அக்காவின் பழைய எட்டாம் வகுப்புப் புத்தகங்களை எடுத்துக் கொண்டான்.

வகுப்பறைக்குள் நுழைந்ததும் முதல் வேலையாக புத்தகங் களைப் பாலுவிடம் கொண்டு போய் கொடுத்தான் சிவா. பாலு சிவாவை நன்றி யுடன் பார்த்தான். தன் நண்பனின் மனமாற் றத்தை வியந்து போய் பார்த்தபடி இருந்தான் மாறன். ஆசிரிய ரும் சிவாவைப் பாராட்டினார்.



1865-இல் ஆங்கிலேயப் பிரபுவான மார்குயஸ் என்பவர் குயின்ஸ் பெர்ரி என்ற குத்துச் சண்டை விதிகளை இயற்றினார். இந்த விதிகள்தாம் இன்றைய போட்டிகளில் கடை பிடிக்கப்படுகின்றன.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. 2003 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்த விளையாட்டின் உலகக் கோப்பைப் போட்டிகள் நடைபெறவுள்ளன (5)

3. வீட்டுச் சுவர்களில் வாழும் இந்தப் பிராணி ______ (3)

4. பூ, காய்க்கு அடுத்த நிலை (3)

5. பயம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (2)

6. ______யில் இருந்தால் அகப்பையில் வரும் (3)

8. கண், காது, மூக்கு, வாய் எல்லாம் சேர்ந்தது ______ (3)

9. உயிர் வாழ ஆக்ஸிஜன் அவசியமா? (2)

12. அரிசியைப் போன்று முக்கிய உணவு தானியம் (3)

வலமிருந்து இடம்

2. மண்கூடு கட்டும்; கொட்டுவதற்கு வரும் (3)

10. ______ செய்ய விரும்பு (3)

11. ஆகாய தோட்டி (3)

14. உலக அளவில் மிக முக்கியமான விளையாட்டு (5)

மேலிருந்து கீழ்

2. கிராமப்புறங்களில் உள்ள நீர் நிலை (3)

8. அரிசியைச் சுத்தம் செய்ய இது உதவும் (3)

10. பெரிய ______ நோயை ஒழித்து விட்டார்கள் (3)

கீழிருந்து மேல்

4. அதிகாரமுள்ள பொறுப்பு (3)

5. கிழங்குகளில் ஒன்று. கருஞ்சிவப்பு நிறத்தில் மண்ணுக்குள் விளையும் (4)

6. பூக்களில் ஒன்று, மாலையில் நிச்சயம் இருக்கும் (5)

7. நாடாளுமன்றம் இங்கு உள்ளது (3)

12. சினம் என்பதை இப்படியும் சொல்லலாம் (3)

13. பூமியில் வடக்கு அல்லது தெற்கு முனை (4)

14. மழை நிறைந்த ஐப்பசி, கார்த்திகை மாதங்களை இப்படி கூறலாம் (5)

- ஆர். புவனபவித்ரா,
எட்டாம் வகுப்பு,
அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
காங்கேயம்.

விடை 64 ஆம் பக்கம்



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

உங்களுக்குப் பிடித்தமான பரிசுப்போட்டி, ஜோக்ஸ், கதைகள், அனுபவங்கள், துணுக்குகள், ஒவியப் போட்டி என பல விஷயங்கள் கோகுலத்தில் வெளிவருகின்றன. கோகுலத்தைப் படித்து மகிழ்வதுடன் உங்கள் படைப்புகளையும் அனுப்பி வைக்கலாம். உங்கள் நண்பர்களையும் கோகுலம் உறுப்பினராக்கலாம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



புதிர் பக்கம்

I **உ**ங்கள் நண்பரிடம் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்.

அதனுடன் 32ஐ கூட்டச் சொல்லுங்கள்.

பிறகு வந்த கூட்டுத் தொகையை 10ஆல் பெருக்கச் சொல்லுங்கள்.

அடுத்து வந்த தொகையிலிருந்து 120ஐ கழிக்கச் சொல்லுங்கள்.

மேலும் 200ஐ கழிக்கச் சொல்லுங்கள்.

மீதி வந்த தொகை எவ்வளவு என நண்பரிடம் கேளுங்கள்.

கூறிய மீதித் தொகையை 10ல் வகுங்கள். அடிப்படை எண் வந்து விடும்!

II **எ**ங்கள் வகுப்பில் பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி என மூன்று மாணவியர் இருந்தனர். மூன்று பேரும் மூன்று ரகம்.

பார்வதி எப்பவுமே நிஜம் மட்டுமே பேசுவாள்.

லக்ஷ்மியின் வாயில் பொய் மட்டுமே வரும்.

சரஸ்வதி வாயைத் திறந்தாலே பாதிபொய், பாதி நிஜம்.

பரிட்சை முடிந்து, ரிசல்ட் வந்தபோது, பாஸா.... ஃபெயிலா எனக் கேட்டபோது, அவர்கள் பாணியிலேயே பதில் தந்தனர்.

பார்வதி: நான் பாஸ், லட்சுமி ஃபெயில்

லட்சுமி: நான் பாஸ்... சந்தோஷ் பெயில்

சரஸ்வதி : பார்வதி ஃபெயில், நான் பாஸ். இவர்களின் ரிசல்டைக் கண்டுபிடியுங்கள்.

— வி.ஆர். கிருத்திகா,
திருச்சி — 14

III **பு**லவர் ஒருவர் பறவைகளுக்கு ஒன்பது கால்கள் உள்ளன. யானைகளுக்குப் பதினேழு கால்கள் உள்ளன என்று சொல்கிறார்.

இது சரியா? தவறா?

— ஏ.கே.எஸ். குமார்,
விருதுநகர்.

IV **கீ**ழே கொடுக்கப்பட்டிருக்கும் ஏழு கேள்விகளுக்கும் விடையின் ஆரம்ப எழுத்து பா. பதில்கள் இரண்டெழுத்து, மூன்றெழுத்து, நான்கெழுத்து, ஐந்தெழுத்து, ஆறெழுத்து, ஏழெழுத்து மற்றும் எட்டெழுத்து என ஏறுவரிசையில் அமைந்திருக்கும். எங்கே விடைகளைக் காணுங்கள் பார்க்கலாம்?

1. விமான விபத்தில் இறந்த இந்திய விஞ்ஞானி ஹெச்.ஜெ...............
2. மிக உயரமான இடத்தில் அமைந்துள்ள விமான நிலையம்..........
3. கடல்வாழ் பிராணியான 'வால்ரஸ்' எந்த வகை உயிரினத்தைச் சேர்ந்தது.
4. சுதந்திரம் பெறுமுன்பே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடியவர்............
5. பாரதியைத் தன் குருவாக ஏற்றுக் கொண்டவர்..........
6. தருமரிலிருந்து சகாதேவன் வரை இப்படி அழைக்கப்பட்டனர்........
7. இந்தியாவிலேயே முதன் முதலாகப் பின்னணி இசை அறிமுகப்படுத்தப்பட்ட படம்.......

— த. மணிக்கலா,
நீடாமங்கலம்.

V **இ**ரண்டு நண்பர்கள் செஸ் ஆடினார்கள். ஐந்து ஆட்டம் நடைபெற்றது. எந்த ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி முடியவில்லை. இருவரும்

சமமான ஆட்டம் கணக்கிலேயே வெற்றி பெற்றனர். அது எப்படி?

— என். ஜரினா பானு,
திருபட்டிணம்.

VI ஒரு பெரிய பெட்டிக்குள் ஐந்து பெட்டிகள் உள்ளன. அப் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் ஐந்து சிறிய பெட்டிகள் உள்ளன. எனில் மொத்த பெட்டிகள் எத்தனை?

— என். ஜரினா பானு,
திருபட்டிணம்.

விடைகள்:

I உதாரணம்: அடிப்படை எண் :12
: 12+32 = 44
: 44x10 = 440
: 440-120 = 320
: 320-200 = 120

வகுக்கும் எண் $\frac{120}{10} = 12$

II பார்வதி — பாஸ்
லட்சுமி — பெயில்
சரஸ்வதி — பாஸ்

III சரிதான். இங்கு கால் என்பது ¼ அளவையைக் குறிக்கும். பறவைக்கு ஒன்பது கால்கள் என்பது 9x¼=2¼ எனவே பறவை இனத்திற்கு இரண்டேகால்கள் என்று பொருள். அதேபோல் யானைக்கு 17x¼-4¼ நாலேகால்கள் என்று பொருள்.

IV பா பா
பா ங் டா
பா ஹூ ட் டி
பா ர தி யா ர்
பா ர தி தா ச ன்
பா ண் ட வ ர் க ள்
பா க் கி ய ச க் க ரா

V இருவரும் வேறு இருவருடன் செஸ் ஆடினார்கள்.

VI 31 பெட்டிகள்

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 கி	ரி	க்	கெ	ட்	■	வி	ள	2 கு
ங்	■	■	■	ரு	■	த	■	ள
3 ப	ல்	லி	■	ட்	■	4 ப	ழ	ம்
ம்	■	ல்	■	5 பீ	தி	■	■	■
6 ச	ட்	7 டி	■	■	■	8 மு	க	ம்
■	■	■	9 ஆ	ம்	■	ற	■	ல
ம்	ற	10 அ	■	வ	■	ம்	க	11 கா
ப	■	ம்	■	ரு	■	■	■	ர்
12 கோ	து	மை	■	13 து	ந்	ப	ல்	14 கா



எஸ்.மோகனா



ரப்பர் உலகம்!

ரப்பர் என்றதும் நமக்கெல்லாம் நினைவுக்கு வருவது, பென்சில் எழுத்தை அழிக்கும் அழிப்பான்தான். நாம் பயன்படுத்தும் பல பொருட்கள் ரப்பரால் ஆக்கப்பட்டுள்ளன. ரப்பரின் தாயகம் தென்னமெரிக்காதான். ரப்பரின் வரலாறு சுவையானது. ரப்பர் தொழிலே 100 ஆண்டுகளுக்கு முன்புதான் துவங்கியது. தென்னமெரிக்காவிலுள்ள, அமேசானிய இந்தியர்கள், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பந்துகள், விளக்குகள், கொள்கலன்கள் போன்றவை செய்ய ரப்பரைப் பயன்படுத்தினர். மெக்ஸிகோவிலுள்ள அஸ்டெக்குகள், ரப்பரால் செய்த பந்தால் விளையாடியிருக்கின்றனர். இதனை ஐரோப்பியர்கள் 16ம் நூற்றாண்டில் கவனித்தனர். பின் கி.பி. 1600ல், ஸ்பானியர்கள் நீர் புகாமலிருக்க காலணிகள், துணிகள், தொப்பிகளுக்கு ரப்பர் பூச்சுக் கொடுத்தனர். ஆண்டிஸ் மலைப் பகுதிகளில் ஹைவே என்ற இயற்பெயர் ரப்பருக்கு இருந்ததை, கி.பி. 1734ல் 'லா கோண்டயின்' தெரிவித்தார். ஜோசப் பிரீஸ்ட்லி என்ற இங்கிலாந்துகாரரால்தான் இதற்கு ரப்பர் என்ற பெயர் வந்தது. ஏனெனில் இவர்தான் கி.பி. 1770ல், இப்பொருள், பென்சிலின் கறுப்புத் தடங்களை அழிப்பதை, அதாவது 'ரப்' (Rub) செய்வதைக் கண்டுபிடித்தார். எனவே இதற்கு ரப்பர் என்ற பெயரே நிலைத்து விட்டது.

மா சின்டோஷ், கி.பி. 1823ல், நாஃப்தால் என்ற கரைப்பானில் ரப்பர் கரைவதைக் கண்டுபிடித்தார். இதன் பின்னரே, ரப்பர் கிடைக்காத இடங்களில் கூட, ரப்பர் – நாஃப்தால் கரைசலை நீர்த் தடுப்பு துணிகளுக்குப் பயன்படுத்த துவங்கினர். இதற்குப் பதினாறு ஆண்டுகளுக்குப் பிறகு தான், கி.பி. 1839ல், குட் இயர் என்பவர், ரப்பரைக் கந்த

கத்துடன் 150° C வெப்பத்தில் இணைத்து செய்யும் வல்கனைசேஷன் என்ற முறையைக் கண்டுபிடித்தார். இது ரப்பர் தொழிலில் புரட்சியை உண்டு பண்ணியது. இதற்கு முன் ரப்பரைச் சூடாக்கினால் இளகுவதும், குளிர வைத்தால் கெட்டியாகி உடைவதுமாக இருந்ததால், தொழில் ரீதியாக ரப்பர் அவ்வளவாகப் பயன்படவில்லை. ரப்பரின் வணிக வளர்ச்சியில் மிக முக்கியமானது, காற்று நிரம்பிய டயர்களைக் கண்டுபிடித்ததே ஆகும்! இவை போக்குவரத்து சாதனங்களின் சக்கரங்கள் உருள மிகவும் பயன்படுகின்றன.

முன்பெல்லாம், பிரேசிலின் அமேசான் மழைக் காடுகளில் வளர்ந்த ரப்பர் மரங்களை வெட்டியே ரப்பர் பாலைச் சேகரித்தனர். ரப்பரின் உயரிய மதிப்பு தெரிந்தபின், பிரேசில் அரசு ரப்பர் விதைகள் ஏற்றுமதியைத் தடை செய்தது. இருப்பினும் 1873ல், ஹ்பாரிஸ் என்ற ஆங்கிலேயர் லண்டனில் உள்ள தாவரவியல் பூங்காவுக்காக, ரப்பர் விதைகளைக் கடத்திச் சென்றார். சில நோய்களின் பாதிப்பால், தாய் நாடான பிரேசிலில் ரப்பர் மரங்கள் அழிந்து விட்டன. மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, இலங்கை, இந்தியாவில் மட்டும், உலக ரப்பர் உற்பத்தியில் 90 சதம் விளைகிறது. இந்தியாவில் தமிழ் நாடு, கேரளா, கர்நாடகா மாநிலங்களில் மட்டுமே ரப்பர் தோட்டங்கள் உள்ளன.

வெப்ப, மித வெப்ப நாடுகளிலுள்ள பல வகை ரப்பர் மரங்கள் ரப்பரைத் தருகின்றன. ரப்பர் மரங்கள் வெள்ளை அல்லது மஞ்சள் நிறமுடைய, பிசுக்குத் தன்மையுடைய திரவத்தைச் சுரக்கின்றன. இதுவே ரப்பர் பாலாகும். ரப்பர் மரத்தின் எப்பகுதியை வெட்டினாலும், இலையைக் கிள்ளினாலும், அங்கிருந்து பால் சுரந்து, வெட்டிய/கிள்ளிய காயத்தை அடைத்து விடும். ரப்பர் பாலிலுள்ள வேதிப் பொருட்கள், அது உற்பத்தியாகும் மரவகைக்கு ஏற்ப மாறுபடும். ரப்பர் பாலில் ரப்பரைத் தவிர பல அமிலங்கள், தாது உப்புகள், சர்க்கரை, மாவுப் பொருட்கள், புரதம், நொதிகள், ஒட்டும் பொருட்கள், ரெசின்கள், எண்ணெய்ப் பொருட்கள் போன்றவை உள்ளன.



மரத்திற்கு 6 வயதானவுடன் ரப்பர் பால் சேகரிப்பு தொடங்குகிறது. ரப்பர் மரத்தை பாலெடுக்க வெட்டுவதற்கென்று சிறப்பு கத்தி உண்டு. ரப்பர் பால் காலையிலேயே சேகரிக்கப்படும். மதியத்தில் பால் வடிவது நின்று விடும்.

சேகரித்த ரப்பர் பாலை அசிட்டிக் அல்லது பார்மிக் அமிலத்துடன் கலந்து, கெட்டியான வெள்ளைநிற பஞ்சு போன்ற ரப்பராகத் தொழிற்சாலையில் மாற்றுகிறார்கள்

இப்போது வேதியியலாளர்கள் செயற்கை ரப்பரை உற்பத்தி செய்கின்றனர். ஊர்திகளில் பயன்படுத்தப்படும் டயர்கள் இயற்கை, செயற்கை ரப்பர் கலவைகளினாலேயே செய்யப்படுகின்றன. ரப்பரின் முக்கால் பகுதி, எந்திர வாகனங்கள், வான்ஊர்தி, சைக்கிள்களின் டயர்களாகின்றன. பூட்ஸ், ஷூக்கள், செருப்புகள், ஹோஸ் குழாய்கள், பாய்கள், பெல்ட், மழை கோட்டுகள், நீர் புகா பொருட்கள், பொம்மைகள், காப்பிடப்பட்ட மின்கம்பிகள் போன்றவை ரப்பரால்தான் செய்யப்படுகின்றன. கச்சா ரப்பரில் 30 சதம் கந்தகத்துடன் கலந்து வல்கனைசிங் செய்யப்பட்டு, கடின ரப்பராகி, தொலைபேசி, வானொலி பாகங்கள், அறுவை சிகிச்சையில் உதவும் சில பொருட்களாக உருமாறுகின்றன.



முதல் பரிசு
வி. சரஸ்வதி,
ஏழாம் வகுப்பு,
டவுன் மேல்நிலைப் பள்ளி,
கும்பகோணம்.

வண்ணத் தூரிகை

டிசம்பர் இதழில் 'பலூன்கள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற பலூன்கள் உங்கள் பார்வைக்கு...



மூன்றாம் பரிசு
டி.ஜி. சிவப்ரியா,
ஆறாம் வகுப்பு, மாமல்லன்
மெட்ரிக் பள்ளி, காஞ்சிபுரம்.



இரண்டாம் பரிசு
எம்.டி. கார்த்திகேயன்,
மதுரை.






ஆறுதல் பரிசு
டி. ராபின் சாலமன் ரத்னராஜ்,
பத்தாம் வகுப்பு, ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.

ஆறுதல் பரிசு
எஸ். லோகநாதன்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கெட்டிச்செவியூர்.



பலூன்கள்

க. ஸ்ரீப்ரியா



சைக்கிள் ஆசை

காலை எட்டு மணி.

கார்த்திக் அப்பாவின் முன் தயங்கித் தயங்கி கேட்கலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன கார்த்திக், என்ன வேணும் உனக்கு?" என்றார் அப்பா.

"அப்பா எனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தாங்கன்னு உங்களிடம் எவ்வளவு நாளாகக் கேட்கிறேன். என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் சைக்கிள் வைத்து இருக்கிறார்கள். நான் மட்டும் நடந்து போறேன். அதுவுமில்லாமல் அடுத்த வாரத்துல இருந்து சாயந்திரம் ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு. சைக்கிள் இருந்தா இரவானாலும் சீக்கிரம் வந்துடலாம்" என்றான் கார்த்திக்.

"சரிப்பா. எனக்குப் புரிகிறது. இப்போது இருக்கும் பணம் சைக்கிள் வாங்கப் போதாது. இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள். உனக்குப் புது சைக்கிள் வாங்கித் தர்றேன். போன வாரம் உன் பிறந்த நாளுக்கே சைக்கிள் வாங்கித் தரலாம்னு நினைச்சேன். அப்ப தானே நம்ம தாத்தாவுக்கு உடல்நிலை சரியில்லாம இருந்தது?

"உனக்கு சைக்கிள் வாங்கலாம்னு வைத்திருந்த பணம் தாத்தாவோட மருந்து

வாங்க செலவாயிடுச்சு. இன்னும் ஒரு மாசம் பொறுத்துக்கோ, உனக்குப் புது சைக்கிள் வாங்கித் தர்றேன். இப்போ நீ ஸ்கூலுக்குக் கிளம்பு'' என்றார் அப்பா.

கார்த்திக் கோபத்தோடு ஏதோ முணு முணுத்துக் கொண்டே பள்ளிக்குக் கிளம்பி னான்.

மாலை பள்ளி விட்டு, வீட்டுக்கு வந்து சேர்ந்தான் கார்த்திக்.

"அப்பா, நம்ம ஊரில் ஹாரிபாட்டர்னு ஒரு ஆங்கிலப் படம் வந்திருக்காம். சூப்பரா இருக்குன்னு என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் சொன்னாங்க. இந்த ஞாயிற்றுக் கிழமை நாம் அந்தப் படத்திற்குப் போகலாமாப்பா'' என் றான் ஆர்வம் பொங்க கார்த்திக்.

"சாரி கார்த்திக், சினிமாவுக்கு நான் வர முடியாது. சனி, ஞாயிறு இரண்டு நாள் ஆபிஸ் கேம்ப், நான் திருச்சி போறேன்'' என்றார் அப்பா.

காற்றுப் போன பலூன் போல சோக மாகிப் போனான் கார்த்திக்.

"நான்தானே வரமாட்டேன்னு சொன் னேன். நீயும் அம்மாவும் போயிட்டு வாங்க'' என்றார் அப்பா, சமாதானமாக.

உடனே கார்த்திக் சந்தோஷத்தில் குதித் தான். "தேங்க்யூ அப்பா'' என்று அப்பாவை முத்தமிட்டான்.

அம்மாவும் கார்த்திக்கும் சினிமாவுக்கு போய் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டி ருந்தனர்.

அம்மா அந்தத் திரைப்படத்தில் உள்ள சிறந்த காட்சிகளை விமர்சித்துக் கொண்டி ருந்தார். கார்த்திக் சுவாரசியமின்றி அம்மா சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அம்மா கார்த்திக்கைப் பார்த்து "ஏண்டா நீ தானே இந்தப் படத்தை பார்க்கணும்னு சொன்னே. இப்ப என்ன டான்னா உம்முன்னு வர்றே'' என்றார்.

''என்னம்மா சொன்னீங்க?'' என்றான் கார்த்திக்.

மறுநாள் காம்ப் முடிந்து அப்பா வீட்டிற்கு வந்திருந்தார். அப்பாவிடம் கூட சந்தோஷமாகப் பேசாமல் மௌனமாக இருந்தான்.

"ஏன் உம்னு இருக்கே? என்ன ஆச்சு? சொல்லுப்பா'' என்று பரிவோடு கேட் டார் அப்பா.

''அப்பா, என்னை மன்னிச் சிடுங்க, உங்களை சைக்கிள் கேட்டு நிறைய தொல்லை கொடுத்துட் டேன். சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போகலைன்னு கோவிச்சுகிட்டேன்'' என்றான்.

அப்பாவும் அம்மாவும் அவனை ஆச்சர்யத்தோடு பார்த்தனர்.

"நேற்று அம்மாவோடு சினிமா பார்க்கப் போயிருந்தேன்ல.. ஸ்நாக்ஸ் வாங்கப் போன கடையில் போலியோவால கால் சூம்பிய ஒரு பையன் ஸ்நாக்ஸ் வித்துட்டு இருந் தான்.

அவன், லீவு நாட்களில் ஸ்நாக்ஸ் விற்பானாம். மற்ற நாட்களில் பள்ளிக்கும் போகிறான்.


"என்னைப் பரிதாபமாக பார்க் கிறவங்களைத்தான் எனக்குப் பிடிக் காது. உங்களால செய்ய முடிகிற எல்லாவற்றையும் என்னாலும் செய்ய முடியும்''ன்னு சொன்னான்.

''அதைக் கேட்டதும் என் மனத்தில் ஒரு புது வைராக்கியம் பிறந்தது. இனிமேல் நான் காலையில் சீக்கிரம் எழுந்து என் வேலையை நானே பார்ப்பேன். உங்களுக்கு உதவியா இருப்பேன். உங்க கஷ்டத்தைப் புரிஞ்சுக்கிட்டு நல்ல மகனாக இருப்பேன்'' என்றான் கார்த்திக். அம்மாவும் அப்பாவும் கார்த்திக்கை அணைத்துக் கொண்டனர்.

மதுரை மாவட்டச் சிறப்பிதழ்

கோகுலம் மாவட்டச் சிறப்பிதழ்களை வெளியிட இருக்கிறது. இதற்கென ஒவ்வொரு இதழிலும் சில பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன. மதுரை மாவட்டத்திலிருந்து தொடங்குகிறோம். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி மாணவ / மாணவியர் கதைகள், கவிதைகள், ஜோக்ஸ், துணுக்குகள், புதிர்கள், அனுபவங்களை எழுதி அனுப்பலாம். இது தவிர மதுரை மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசி தேதி: 15.1.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.

மசாலா பாப்கார்ன்



ஆங்கில புத்தாண்டு

கி.பி. 1563ம் ஆண்டு வரை, ஆங்கில ஆண்டின் முதல் மாதம் ஏப்ரல் ஆகத்தான் இருந்தது. அதுவரை ஏப்ரல் முதல் தேதியைத்தான் புத்தாண்டாகக் கொண்டாடினர். கி.பி. 1564ம் ஆண்டில் இருந்துதான் ஆங்கில ஆண்டின் முதல் மாதம் ஜனவரி மாதமானது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் ரோமானியர்கள்.




குங்ஹை பயசாய்

'குங்ஹை பயசாய்' என்றால் சீனமொழியில் 'புத்தாண்டு நல்வாழ்த்துகள்' என்று பொருள்.

முதல் காலண்டர்

காலண்டர் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் எகிப்தியர்கள். தற்போதைய காலண்டர் முறையை அதாவது, ஜனவரி முதல் டிசம்பர் வரை என்ற வரைமுறையை உருவாக்கியவர் பதிமூன்றாம் கிரிகோரி என்பவர். இந்தக் காலண்டர் கி.பி. 1582ம் ஆண்டு ரோமில் வெளியிடப்பட்டது.


- எம்.விநோத், சங்கரன்கோவில்



ஹாலி காமெட்!

அந்தக்காலத்தில் வால் நட்சத்திரங்கள் வானில் தோன்றினாலே ஒரு பேரழிவு நடைபெறப்போவதாக மக்கள் நம்பினர். கி.பி. 1684ல் ஒரு வால் நட்சத்திரம் வானில் தோன்றியது. அப்போது வானியல் அறிஞர் ஹாலி என்பவர் இந்த வால் நட்சத்திரம் பற்றி ஆய்வு செய்து மீண்டும் இந்நட்சத்திரம் 75 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றும் என்றார். அப்போது யாரும் அவரை நம்பவில்லை. ஹாலி சொன்னது போலவே 1759ல் தோன்றியது வால் நட்சத்திரம். அந்நட்சத்திரத்திற்கு ஹாலி வால் நட்சத்திரம் என்று பெயரிட்டனர். இந்நட்சத்திரம் கடைசியாக 1984ம் ஆண்டில் தோன்றியது.

- ஹ.அருண்குமார், பத்தாம் வகுப்பு, ஸ்ரீசேது மாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.



அலகின் வலிமை?

கொண்டை உள்ள மரங்கொத்திக்கு வலிமையும், உளி போல் மரத்தைக் கொத்தும் திறமையும் இருப்பதற்குக் காரணம் அதன் அலகும் மண்டை ஓடும் ஒரே எலும்பால் ஆனதால் தான். மற்ற பறவைகளுக்கு அலகு வேறாகவும் மண்டையோடு வேறாகவும் இருக்கும்.

பெரும்பாலான பறவைகளுக்குக் காலில் முன் புறம் மூன்று நகங்களும் பின்புறம் ஒன்றும்தான் இருக்கும். ஆனால் மரங் கொத்திக்கு மட்டும் முன்னால் இரண்டும், பின்னால் இரண்டும் உள்ளன. அதனாலேயே செங்குத்தான மரத்திலும் அதனால் நிற்க முடிகிறது. மேலும் அதன் வால் கெட்டியான இறகுகளால் ஆனது. எனவே, அதன்மேல் தன் பாரத்தை ஏற்றி ஊன்றிக் கொள்ளவும் முடிகிறது.

- ஆர்.ஆர்.பூபதி, கன்னிவாடி, திண்டுக்கல்

எறும்புத் தின்னி

எறும்புத்தின்னி என்னும் ஒரு வகை விலங்கு தென் அமெரிக்காவில் அதிகமாகக் காணப்படுகிறது. இது ஆறு அடி நீளமும், மூன்று அடி உயரமும் இருக்கும்.

இதன் மூக்கு நீண்டு, தடித்து, கூர்மையாக இருக்கும். இது கரையான் புற்று, எறும்புப் புற்றுகளில் தன்னுடைய நீண்ட மூக்கை முதலில் உள்ளே நுழைக்கும். பிறகு தன் நீளமான நாக்கை நீட்டி இங்கும், அங்கும் துழாவும். புற்றில் உள்ள கரையான்களும், எறும்புகளும் அதன் நாக்கில் உள்ள பசையில் ஒட்டிக் கொள்ளும், பிறகு அவற்றை விழுங்கி விடும்.



அதன் கால்களில் உள்ள கூரிய நகங்களால் கரையான் புற்றுகளைக் கூட அது சரித்து எறியும். புற்றுகளிலிருந்து வெளியே வருகின்ற கரையான்களையும், எறும்புகளையும் நாக்கால் நக்கி, வேகமாக விழுங்கிவிடும்.


பொதுவாக எறும்புத் தின்னிகள் பகல் நேரங்களில் அமைதியாகப் படுத்து உறங்குகின்றன. இரவு நேரங்களில்தான் வேட்டைக்குக் கிளம்புகின்றன.

பாம்பைக்கூட தன் கூரிய நகங்களால் கிழித்து எறிந்து, துண்டுகளாக்கி விடும் திறன் இதற்கு உண்டு.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

செய்திப்படம்


முதன்முதலில் செய்திப் படங்களைத் தயாரிக்க முடியும் என்பதனைக் கண்டவர் ஒரு ஃபிரெஞ்சுக்காரர். ஒரு வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. இக்காட்சியினைத் தற்செயலாகப் படம் எடுத்தார் அவர். அதனைப் பிறகு திரையில் போட்டுக் காண்பித்தபோது மக்களிடையே அந்தச் செய்திப் படத்திற்கு நிறைய வரவேற்பு கிடைத்தது. உற்சாகமானார் அவர். தொடர்ந்து விதம் விதமாகச் செய்திப் படங்களை எடுத்து மக்களுக்குக் காட்டினார். அதிலிருந்து செய்திப் படங்கள் வரத் துவங்கின. அமைதியாய் இருந்த இப்படங்கள் 1927ல் பேசும் படங்களாயின.



- கே.சுதர்ஷன், தூத்துக்குடி

டிஷ்பியர்கள்

கி.மு. 2500 காலத்திலெல்லாம் நாடகம் போடுபவர்களை நடிகர்கள் என்று அழைக்காமல் டிஷ்பியர்கள் என்றே அழைத்து வந்தனர் கிரேக்கர்கள். கிரேக்க




நாட்டில் டிஷ்பியர் என்பவர் வண்டியில் ஊர் ஊராகச் சென்று அந்த வண்டியையே அரங்காகப் பயன்படுத்தி நாடகம் நடத்தி வந்தார். அதனால் அவர் பெயரிலேயே நாடகக் கலைஞர்களை டிஷ்பியர்கள் என்று உலகம் முழுவதும் அழைத்தனர்.

- ராமகிருஷ்ணன், காயக்காடு

ஓட்டுநர்களாக ஆக...

ரஷ்யாவில் பல நகரங்களில் 'சில்ட்ரன் டிரைவிங் டவுன்' என்ற பூங்காக்களை ஆங்காங்கே நிறுவியிருக்கிறார்கள். இந்தப் பூங்காக்களில் சிறு பிள்ளைகள் ஓட்டக் கூடிய சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற வாகனங்கள் உண்டு. அத்துடன் பூங் காக்களிலேயே டிராஃபிக் சிக்னல்களும் உண்டு.



குழந்தைகள் தமக்குப் பிடித்த மான வாகனங்களில் உட்கார்ந்து ஓட்டும்போது, டிராஃபிக் போலீஸார் அவர்களுக்கு அங்கேயே சிக்னல்களையும் சாலை விதிகளையும் எப்படி பின்பற்ற வேண்டுமென்று பொறுமையாகச் சொல்லிக் கொடுத்து வருங்காலத்தில் தவறு இழைக்காத ஓட்டுநர்களாகத் திகழ வழி செய்கிறார்கள்.

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்



கொடி

கொடிகளைப் பயன்படுத்துவது எப்போது முதல் வழக்கில் உள்ளது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. பழங்கால வேட்டைக் குழுவினர் விலங்குகளின் தோலையும் பறவைகளின் இறகுகளையும் கொடி போல பயன்படுத்தி இருக்கிறார்கள். புராதன எகிப்தியர்கள் விலங்கு, பறவை உருவங்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். கி.மு. 1100ல் தோலுக்குப் பதிலாகத் துணியும், நிறமும் கொடிகளில் பயன் படுத்தப்பட்டன. இவ்வாறு துணியில் சின்னங்களைப் பொறித்து கொடியாக முதலில் பயன்படுத்தியவர்கள் சீனர்கள்தான்!

- இரா. சுமதி, நாமக்கல் மாவட்டம்

கால்கள்


40 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் உயிரியல் புரட்சி ஏற்பட்டது. கடலில் மட்டும் நீரில் வாழும் உயிரினங்கள் இருந்தன. நிலப்பரப்பில் தாவரங்களைத் தவிர வேறு உயிரினங்கள் இல்லை. கடலில் வாழும் மீன் வகை உயிரினங்கள் தரைப் பகுதியை நோக்கிச் சென்றன. மீனின் துடுப்புகள் போன்ற செதில்கள் வலுப்பெற்று கால்களாக மாறின.

- எஸ்.மோகன்ராஜ், சீர்காழி

அடி வாங்கிய அருமை நண்பன்!

இடி விழுந்தது போலிருந்தது பாஸ்கருக்கு. காதில் 'ஙொய்ய்' என்று ஒரு சத்தம். தலை கிறுகிறுக்க அப்படியே புல் தரையில் உட்கார்ந்து விட்டான். நல்லவேளை மயக்கம் வரவில்லை. சற்று நேரத்தில் தலைச் சுற்றல் நின்றுவிட்டது. நிமிர்ந்து பார்த்தான். அவனை மேல் தாடையில் பலமாக அடித்த ரகு, திரும்பிப் பாராமல் நடந்து கொண்டிருந்தான்.

'நேற்றுதானே, 'என்னோட பெஸ்ட் ஃபிரெண்ட் நீதாண்டா' என்று சொல்லி தோளைச் சுற்றிக் கை போட்டான்! இன்றைக்கு இப்படி அடித்துவிட்டானே?' பாஸ்கருக்கு ஆத்திரமாக வந்தது. தாடையில் 'விண் விண்' ணென்று வலி. தடவிப் பார்த்ததில் இலேசான வீக்கம் தெரிந்தது. சாட்சியத்துக்கு இது போதாதா? நேரே ஹெட்மாஸ்டர் அறைக்குப் போனான்.



"எதற்கு இவனை இப்படி அடித்தாய்? கன்னம் வீங்கும்படி அடிச்சிருக்கியே!" - ஹெட்மாஸ்டர் கோபமாய்க் கேட்டார்.

"தள்ளுவண்டி தாத்தாகிட்ட கடலை வாங்கினான், ஸார். ஒரு ரூபாய்க்குப் பதில் ஐம்பது பைசா நாணயம் கொடுத்தான். இரண்டும் கிட்டத்தட்ட ஒரே சைஸா இருக்கே. கிழவன் ஏமாந்துட்டான்!"

"அதுக்காக இப்படி அடிக்கிறதா? நல்ல வார்த்தை சொல்லித் திருத்தறது..."

"நண்பன் தப்பு செய்தா மேற்சென்று அவனை இடிக்கணும்னு வள்ளுவரே சொல்லியிருக்காரே, அதனால்தான் கையை உயர்த்தினேன்!"

தலைமை ஆசிரியருக்குச் சட்டென்று புரியவில்லை. 'என்ன உளறுகிறான் இவன்...?' சில வினாடிகள் யோசிக்கப் புரிந்தது; சிரிப்பும் பொத்துக் கொண்டு வந்தது!

"இடித்தல்னா, இடி இறங்கறாப்போல அடிக்கணும், குத்தணும்னு அர்த்தமில்லே. வார்த்தைகளால் இடித்துக் காட்டணும். நயமாகவும் பேசலாம்; மிரட்டுவது போல் பயமாகவும் சொல்லலாம்; குத்தலாகவும் கூறலாம். நண்பனைத் திருத்துவதுதான் முக்கியம்; அடிப்பது அல்ல."

தலைமை ஆசிரியர் விளக்கவும் "ஸாரி, ஸார்" என்றான் ரகு. "நேற்று தமிழாசிரியர் பாதிக் குறளுக்கு அர்த்தம் சொல்லும் போதே மணி அடிச்சுடுச்சு; மீதிக் குறளுக்கு நானே அர்த்தம் பண்ணிக்கிட்டது தப்பாப் போச்சு!"

"ரெண்டு பேரும் எப்பவும் போல நண்பர்களா இருங்க. ஒருத்தன் தப்பு பண்ணினா இன்னொருத்தன் சிரிச்சுட்டுப் போகாம, இடித்துரைத்து திருத்துங்க" என்று இருவரையும் தட்டிக் கொடுத்து அனுப்பினார் ஹெச்.எம்.

இந்தக் கதை எந்தக் குறளைக் குறிக்கிறது? அதைக் கீழே எழுதுங்கள். தெரியாவிட்டால் தமிழாசிரியரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே!

நகுதற் ____ ____ ____
____ ____ ____

– தம்பிப்பயல்



அவசரமான வேலை.
'பஸ் கிடைக்கவில்லை
நடக்கத் தொடங்கினேன்.
லதா ஒரு பேனா கேட்டாளே
கடைக்குள் நுழைந்தேன்
வந்தான் ஒரு சிறுவன்
பங்கஜம்மாளின் பேரன்
வாங்கினான் ஒரு கோகோ கோலா
பேரம் பேசவில்லையே!
நேற்று, பங்கஜம்மாள்.
கீரைக்காரியிடம் மூன்று
ரூபாய்க் கீரைக் கட்டை,
இரண்டரை ரூபாய்க்குப் பேரம்
பேசினாளே!
சிரித்துக் கொண்டேன்

சிறுவயதில்
பனை ஓலைகளில் காற்றாடி செய்து,
பூவரச இலையில் ஊதல் செய்து,
விளையாடினோமே!
ம்! இன்று,
அந்த ஆக்கத்தை, ஏப்பம்
விட்டுவிட்டதோ,
இந்தக் கடையிலுள்ள பார்பி
பொம்மைகள்?

50 வயதுக் கிழவனும், தன்
80 வயதுத் தாயைக் காப்பாற்றும்
இந்நாட்டில்,
அன்னையர் தினம் எந்நாளும்.



அவசரத் தேவை!



அதற்கெதற்கு ஒரு நாள்
கொண்டாட்டம்?
அதற்கெதற்கு வாழ்த்தட்டை?
அதை ஏன் வாங்கினாள் டீனா?

தொடர்ந்தேன்.
வழியில் டீ.வி.கடை.
வாசலில் இளைஞர்கள் கும்பல்.
இந்தியா, பாகிஸ்தான் இறுதி ஆட்டம்
படிக்கும் வயதில் விளையாடலாம்;
தலைவனாகக் கனவு காணலாம்.
அடிமையாகலாமா?
அதுவும் கிரிக்கெட்டிற்கு.

சிறிது தூரத்தில், குயவன்.
குடை பிடித்திருந்தான்,
பனை ஓலையால்.
பக்கத்துக் கடையில்,
கொத்துக்கொத்தாய்...
பிளாஸ்டிக் குடங்கள்.

நடந்ததால், கால் வலித்தது,
ஆனால் உண்மை புரிந்தது.
என் அவசர வேலையிலும், அவசரத்
தேவை

உலகமயமாக்கல்
எதிர்ப்பு!

– ந. பூஷாவளி,
பதினோராம் வகுப்பு,
கிறிஸ்து ராஜா பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
கிழக்கு தாம்பரம், சென்னை





உங்களிடமிருந்து...

வாழ்த்து அட்டைகளுக்கு நன்றி!

எனக்கு ஓவியத்தில் ஆர்வம் உண்டு. கோகுலம் அறிவித்த 'ஆலமரம்' ஓவியப் போட்டியில் முதன் முறையாகக் கலந்து கொண்டேன். என் ஓவியத்துக்கு ஆறுதல் பரிசு கிடைத்திருக்கிறது. என் மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை. என் அப்பா, அம்மாவுக்கு நிறைய சந்தோஷம். தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் பாராட்டினர். ஓவியக் கலையில் நான் சிறந்து விளங்க, ஊக்கம் கொடுத்த உங்களுக்கு நன்றி.

- கே. சரவணக்குமார், பசுபதியப்பா நடுநிலைப் பள்ளி, காரமடை

மாலா தேடிய மாயப் பெண் படக் கதை விறுவிறுப்பாகச் சென்று கொண்டிருக்கிறது. மந்திரகலாவை

மாலா வெல்ல வாழ்த்துகள். மாதந் தோறும் ஓவியப் போட்டி நடத்தி, என்னைப் போன்ற இளம் ஓவியர்களை உற்சாகப்படுத்துவது பாராட்டுக்குரியது. பரிசு ஜோக்ஸ் அனைத்தும் தூள்.

- ச. அழகுவேல், ஒன்பதாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, க. கருமத்துப் பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

கோகுலம் வழங்கிய வாழ்த்து அட்டைகள் மிகவும் அருமையாக இருந்தன. என் நண்பனுக்கு ஒரு வாழ்த்து அட்டை அனுப்பினேன். அவன் சந்தோஷமடைந்ததுடன், ஒரு கோகுலமும் வாங்கினான். சின்னமனூர் சின்னப்பட்டாளம் முடிவடைவதைக் குறித்து எனக்கு வருத்தமாக இருக்கிறது. குதிரை போட்ட தங்கக் காசுகள் கதை சூப்பர். ஜோக்ஸ் நன்றாக இருந்தன.

- பா. விஜயசாரதி, திருப்பதி

கோகுலம் கொடுத்த வண்ண வாழ்த்து அட்டைகள் அனைத்தும் ரொம்ப, ரொம்ப நன்றாக இருந்தன. அழகான தோட்ட வீடு, குதிரை போட்ட தங்கக் காசுகள் என்ற இரு கதைகளும் அருமை.


- பி. வீரமணி, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, நல்லூர்

'மூளைக்கு அதிகப் பசி' என்ற தலைப்பில் வெளியான துணுக்குகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. வண்ண வாழ்த்து அட்டை மிகவும் பிடித்திருந்தது.

- என். வெங்கடேசன், ஒன்பதாம் வகுப்பு, நல்லூர்

1000/- ரூபாய் பரிசுப் போட்டியில் எனக்குப் பரிசு கிடைத்திருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

- மு. அகமது ஆதில், எட்டாம் வகுப்பு, தூய அருளின்பர் உயர்நிலைப் பள்ளி, பள்ளங்கோயில்.



ஓவியப் போட்டி




வண்ணத்துப்பூச்சிகள் சிறகசைத்துப் பறப்பதைப் பார்த்து ரசித்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : வண்ணத்துப் பூச்சிகள். வண்ணத்துப் பூச்சிகள் பூவில் அமர்ந்து தேன் சுவைக்கலாம்; சிறகசைத்துப் பறக்கலாம்; கூட்டமாகச் செல்லலாம். ஓவியம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறவாமல் குறிப்பிடுங்கள். **கடைசி தேதி 4.1.2003.**

விளையாட்டு உலகம்

கிரிக்கெட்

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே ஏழு ஒரு தினப் போட்டிகள் நடைபெற்றன. இரு அணிகளும் தலா மூன்று போட்டிகளில் வென்று சம நிலையில் இருந்தன. பரபரப்பாகத் துவங்கிய இறுதிப் போட்டியில் மேற்கிந்திய அணி மிகவும் சிறப்பாக விளையாடி தொடரைக் கைப்பற்றிக் கொண்டது.

இந்தியா, நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. நியூசிலாந்து அணியுடன் டெஸ்ட், ஒரு தினப் போட்டிகளில் விளையாடி விட்டு பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் உலகக் கோப்பை போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறது இந்திய அணி.




• இந்தியாவுக்கு வந்த உலகக் கோப்பையுடன் கங்குலி

மேற்கிந்திய அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு உலகக் கோப்பைக்குச் செல்கிறது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே 5 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. இதில் 3-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா தொடரை வென்றுவிட்டது.



• ஸ்டீவ் வாஹ்



• ஆலன் பார்டர்

இவ்வெற்றி மூலம் காப்டன் ஸ்டீவ் வாஹ், ஆலன் பார்டரின் சாதனையைச் சமன் செய்திருக்கிறார்.

93 டெஸ்ட் போட்டிகள் ஆலன் பார்டர் தலைமையில் விளையாடி 32 வெற்றிகளைப் பெற்றது ஆஸ்திரேலிய அணி. ஸ்டீவ் வாஹ் தலைமையில் 42 டெஸ்ட் போட்டிகள் விளையாடி 32 போட்டிகளில் வென்று சாதனை செய்துவிட்டது இந்த அணி.

தடகளம்

உலகின் தலைசிறந்த தடகள வீரர், வீராங்கனைகள் பட்டியலை சர்வதேச தடகள சம்மேளனம் வெளியிட்டுள்ளது. இதில் பெண்கள் வரிசையில் இந்திய வீராங்கனைகள் எட்டு பேரும், ஆண்கள் வரிசையில் இரண்டு பேரும் இடம் பெற்றுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் ஷாட்புட் வீரர்கள் பகதூர் சிங், சக்தி சிங் இருவரும் இடம் பெற்றுள்ளனர். பெண்கள் பிரிவில் சரஸ்வதி ஷா, கே.எம். பீனா மோல், பாலி அலோசியஸ், அஞ்சு பாபி ஜார்ஜ், நீலம் ஜெ.சிங், ஹர்வந்த் கவுர், சோமா பிஸ்வாஸ் மற்றும் ஜெ.ஜெ. ஷோபா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நூல் அறிமுகம்

நினைவில் வாழும் வள்ளியப்பா!



ஆண்களுக்கு அறுபது வயது நிறைவதைத்தானே மணி விழாவாகக் கொண்டாடுகிறார்கள்! மனைவிக்கு அறுபது வயது நிறைந்ததை மணி விழாவாகக் கொண்டாடிய புதுமையாளவரைத் தெரியுமா?

கணிதத்தில் மதிப்பெண் குறைய தண்டனைக்குப் பயந்து அழுத சிறுவனைத் தேற்றி, அவன் வீட்டுக்கே அழைத்து வந்து பெரியவர்களிடம் கூறி நம்பிக்கையளித்த பண்புமிக்க சிறுவனை அறிவீர்களா?

நூலாக வெளியிடத் தேர்ந்தெடுத்த நாவலின் கையெழுத்துப் பிரதியை, பதிப்பக உரிமையாளர் படித்துப் பார்க்கக் கேட்டபோது, ''அவருடைய கையெழுத்தை உங்களால் படிக்க முடியாது'' என்று தானே படித்துக் காட்டிய சிறுவர் பத்திரிகையின் ஆசிரியர் யாரென்பதை அறிவீர்களா?

பெரியவர்களுக்காகவும் கவிதை எழுதிக் கொண்டிருந்தவரை, ''சிறுவர் கவிதை நன்றாக எழுதுகிறீர்கள். பெரியவர்க்கு எழுத எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அதனால் இனி குழந்தைகளுக்கு மட்டும் எழுதுங்கள்'' என்று அவரது திறமைகளை வழிப்படுத்திய கவிஞரைத் தெரியுமா?

சிறுவர் நாடகத்தில் மிகச் சிறப்பாக நடித்த குழந்தைகளுக்கு விருந்து வைத்து மகிழ்ந்த அதிசய மனிதரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

பிரபல வங்கியின் வட்டார மேலாளராகப் பெரிய பதவி வகித்து ஓய்வு பெற்றதும், அதிக வருவாய் வரும் பதவிகளைப் புறக்கணித்துவிட்டுக் குறைந்த சம்பளமாக இருப்பினும் பரவாயில்லை என்று, ஒரு சிறுவர் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பைப் பெரு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்ட, சிறுவர் இலக்கியத்தில் அளவிலா ஈடுபாடு கொண்ட ஒரு இலட்சியக் கவிஞரை அறிவீர்களா?


இவை எல்லாவற்றிற்கும் சரியான பதில் உங்கள் கோகுலத்தின் முதல் சிறப்பாசிரியரான குழந்தைக் கவிஞர் அமரர் அழ. வள்ளியப்பாவேதான். அவருடன் தங்களுக்கு ஏற்பட்ட மறக்க இயலா இனிய அனுபவங்களை குன்றக்குடி அடிகளார், டாக்டர் பூவண்ணன், செல்வ கணபதி, கூத்தபிரான் போன்று எண்பதுக்கும் மேற்பட்ட பல்துறை அறிஞர் பெருமக்கள் இந்த நூலில் வழங்கியுள்ளனர். கவிஞரின் குடும்பத்தினர் அவர் பிறந்த ஊரான இராயவரத்தில் நவம்பர் 7ஆம் நாளன்று விழா எடுத்து இதை வெளியிட்டுள்ளனர். வள்ளியப்பாவின் உன்னதமான பண்புகளை இந்த நூல் படம்பிடித்துப் பதிவு செய்கிறது. நூல் தரமான தயாரிப்பு. வண்ண அட்டையில் குழந்தைக் கவிஞர் நம்மோடு பேசுகிறார்.

நினைவில் வாழும் குழந்தைக் கவிஞர், தொகுத்தவர் தேவி நாச்சியப்பன், பக்.240. விலை அறுபது ரூபாய். வெளியீடு குழந்தைப் புத்தக நிலையம், விற்பனை உரிமை : பாரி நிலையம், 90 பிரகாசம் சாலை, சென்னை - 600 108.


-ரே

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Sub Editor : S. Sujatha
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual : 24 U.S. Dollars, Srilanka Rs.400/-

ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடைகள் : 1. பெண்மணியின் பொட்டு, 2. வண்டியின் டயர், 3. கையிலிருக்கும் குடம், 4. தண்ணீர் குழாய், 5. பெண்மணியின் வளையல்



வண்ணம் தீட்டுங்கள்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

